
# மல்லிகை

ஆசிரியர் : டொமினிக் ஜீவா



விலை 50 சதம்

கலை இலக்கிய மாத இதழ்

# “ஸ்ரீ லங்கா — ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு நல்லுறவு யாராலும் அழிக்க முடியாதது”

—கல்வி அமைச்சர்



ஸ்ரீ லங்கா—ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு நல்லுறவுகளைப் பலப்படுத்தும் நோக்கத்தோடு அண்மையில் கொழும்பு தேஸ்டன் கல்லூரியில் ‘விஞ்ஞானக் கண் காட்சி’ ஒன்றை ஜெர்மனி நடாத்தியது.

கௌரவ கல்வி அமைச்சர் அல்-ஹாஜ் டாக்டர் பதியுத்தீன் மஹ்மூத் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கண்காட்சியை திறந்து வைத்தார்.

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு விஞ்ஞான தளபாடங்களையும் கல்வி அமைச்சுக்கு அன்பளித்தது.

**ஸ்ரீ லங்கா — ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு நல்லுறவை பலப்படுத்துவோமாக!**

சி. வன்னியகுலம்.

'ஆடுதல் பாடுதல் சித்திரம் - கவி
யாதியினைய கலைகளில் - உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர் - பிறர்
ஈனநிலை கண்டு துள்ளுவார்'

மல்லிகை

கொடி: 9 மலர்: 5[illegible]

ஒக்டோபர் 1972

# புது அலுவலகத் திறப்புவிழா

மல்லிகைக்கான புது அலுவலகத் திறப்புவிழா 16-10-72 திங்கட்கிழமை பகல் 4 மணிக்கு நடைபெற இருக்கிறது. 234-ஏ, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் (ராஜா தியேட்டர் ஒழுங்கை) அமைந்துள்ள இக் காரியாலயத் திறப்பு விழாவில் சகல இலக்கிய நண்பர்களையும் கலந்து கொள்ளும்படி வேண்டிக் கொள்ளுகின்றேன்.

புதிய நிலைமைகளில் புதிய கடமைகள் தோன்றிக் கொண்டிருக்கக் கூடிய இச் சந்தர்ப்பத்தில் சகல இலக்கிய நண்பர்களும் ஒருமைப்பட்டுக் கை தந்து உதவினால்தான் இந்த ஜனநாயகப் போராட்டத்தை வென்றெடுக்க முடியும் என்பதையும் மல்லிகையின் சார்பாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

முழு உணர்வு பூர்வமாகத் தினசரி 12 மணி நேரத்திற்கு மேலாக இலக்கியத்திற்காக உழைக்கும் எனக்கு நீங்கள் காட்டும் இதயபூர்வமான ஆதரவுதான் மல்லிகையின் இத்தகைய வளர்ச்சிக் கட்டம்.

கூடிய சீக்கிரம் மல்லிகைக்காகச் சொந்த மெஷின் கிடைக்கக் கூடிய சாத்தியப்பாடுகளை உண்மையாக்கித் தொடர்ந்து முன்னேற சகல இலக்கிய நெஞ்சங்களின் ஒத்துழைப்பும் தேவை.

— ஆசிரியர்

மணக்கும் 'மல்லிகை'
கதை, பெயர்,
கவிதை, கட்டுரை,
கருத்து,.
எல்லாம் ஆக்கியோர்
தனித்துவம்;
பொறுப்பும் அவரே.

அலுவலகம்:
234-ஏ, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம் (இலங்கை)

மல்லிகை

# அறிவுக்கு வேலி இங்கல்ல — அங்கே!

யுனெஸ்கோவின் சர்வதேசப் புத்தகப் பிரசுரக் கருத்தரங்கு இங்கு நடைபெற்று முடிந்துள்ளது. சர்வதேசப் புத்தக மாதமும் கொண்டாடப்பட்டுவிட்டது.

இப் பகைப்புலத்திலே நமது நாட்டின் புத்தகப் பிரசுரங்களைப் பார்க்க வேண்டும். உலகத்திலேயே சிங்களமொழி பேசும் ஒரே யொரு நாடு என்கின்ற முறையில் இங்கு சிங்களப் புத்தகங்கள் தேவைக்கேற்ற அளவு பிரசுரமாகவில்லை என்றே குறிப்பிட வேண்டும். அதே சமயம் நமது நாட்டில் தமிழ்ப் புத்தகங்களின் பிரசுரமும் திருப்திகரமாயில்லை. கடந்த 12 ஆண்டுகளுக்குள் 700 புத்தகங்களுக்கு மேற்பட்டவை — சகல கலை இலக்கியப் பிரிவுகளையும் சேர்ந்த நூல்கள் — இங்கு எழுத்தாளர்களின் முயற்சியால் வெளிவந்துள்ளதையும் நாம் குறிப்பிட்டாக வேண்டும். தனி நபர்களின் இலட்சக் கணக்கான ரூபாய்கள் இத் தொழிலில் முடக்கப்பட்டிருந்த போதிலும் தொழில் என்ற ரீதியில் பிரசுர அமைப்புகள் இன்னமும் குழந்தைப் பருவத்திலேயே உள்ளன. இன்று சில நிறுவனங்கள் எழுத்தாளர்களின் படைப்புகளை நூலுருவில் வெளியிட முன்வந்துள்ளதும் பாராட்டத் தக்கது.

அறிவு என்பது உலகப் பொதுச் சொத்து. அறிவைத் தடை செய்ய வேண்டுமென்பதோ அல்லது அறிவுக்கு இடைஞ்சல் செய்ய முனைவதோ மிகக் கேவலமான மனப்பான்மை. இதே சமயம் அறிவு என்பது ஒரு தனிநாட்டின் குத்தகைச் சொத்துமல்ல!

பாட்டன் பூட்டன் புகழிலே கூதல்காய முனைந்துள்ள ஒரு சிலர் கருத்துச் சொல்ல முற்பட்டுள்ளனர். தமிழகத்திலிருந்து வந்த இலக்கியங்களைக் கட்டுப்படுத்தியது சரியல்லவாம். அறிவுககு வேலியாம். இது அநீதியாம்.

சம்பந்தப்பட்டவர்கள் தங்களது பிறந்த நாட்டிற்கு விசுவாசமாக இருப்பதைப்பற்றி நமக்கு ஆட்சேபணையில்லை. இது வடிகட்டிய சுயநலம்.

நாங்கள் கேட்பது இதுதான்: தமிழகத்திலிருந்து காலங்காலமாக இறக்குமதி செய்யப்பட்டு வந்துள்ளதில் தரமற்றவைகளைக் கட்டுப்படுத்தியதற்காக சந்தைப் பிரச்சினையில் கோபம் கொள்பவர்கள், நமது நாட்டிலிருந்து எத்தனை நூல்களை தமது நாட்டிற் தருவித்துள்ளார்கள்? எத்தனையைப் படித்துள்ளார்கள்?

தமிழகத்திலிருந்து வருவதைக் கட்டுப்படுத்தினால் குய்யோ முறையோ எனக் கூப்பாடு போடுபவர்கள் ஈழத்திற்குச் செய்யப்படும் இந்த இருட்டடிப்பைபற்றி ஏன் மௌனஞ் சாதிக்கின்றனர்?

நாங்கள் மனந்திறந்து கேட்கிறோம்: இதுவரையும் இலக்கியத்தின் பெயரால் ஒரு சில தனிப்பட்ட வர்த்தகர்கள் சுய லாபம் சம்பாதித்து, நம்மை ஒரு நிரந்தரச் சந்தைக் கடையாக வைத்திருந்தனரே தவிர, இந்த நாட்டிற்கோ அல்லது தமிழகத்திற்கோ இலக்கிய பூர்வமாக என்னத்தைச் சாதித்துக் கிழித்துவிட்டனர்?

நெஞ்சைத் தொட்டுச் சொல்ல முடியுமா, என்ன?

தமிழ் அங்கும் — இங்குமுள்ள வர்த்தகச் சூதாடிகளின் சொக்கட்டான் காயாக உருண்டு புரண்டதே தவிர, ஆக்கபூர்வமாகத் தமிழ் வளர்ந்துள்ளதா என்பதையும் நாம் கணக்கிலெடுத்துப் பார்க்கவேண்டும்.

இங்கேதான் இருக்கிறது சூட்சுமம்.

இலக்கியமாவது கத்தரிக்காயாவது?

பணம் பண்ணும் சூதாட்டத்தில் எவரும் எப்படியும் கூப்பாடு போடலாந்தானே?

இதில் விசித்திரம் என்னவென்றால் இங்கொரு காலும் அங்கொரு காலுமாக இரட்டைத் தோணியில் கால் வைத்துள்ள சில பிரகிருதிகள் தமக்குள்ள வாய்ப்பு வசதிகளைப் பெருக்கிக் கொள்வதற்காகவும் முடியுமானால் கடைசி காலத்தில் அங்கேயே தம்மை ஸ்திரப்படுத்தும் நோக்கத்துடனுமே அறிவுக்குத் தடையா எனக் கோஷமெழுப்புகின்றனர்.

இவர்களைப் போன்றவர்களின் தேசாபிமானத்தின் மீதே நாங்கள் பகிரங்கமாகச் சந்தேகப்படுகின்றோம்.

இவர்கள் சர்வதேச அறிவின் நியமிக்கப்படாத பிரதிநிதிகளாகத் தம்மைத் தாமே பிரகடனப் படுத்திக் கொண்டு அழுது தீர்ப்பதிலுள்ள உண்மை நமக்குப் புரியாததல்ல.

கலை இலக்கியம் ஒரு வழிப் பாதையாக அமைந்தால், தமிழ் வாழ்கிறதோ வளர்கின்றதோ அல்ல, முக்கியம், தாம் வளமாக வாழ, இந்த நாட்டுத் தமிழ் மக்களின் உணர்ச்சிகளைத் தமக்குச் சாதகமாக்கி வங்கிக் கணக்கைப் பெருப்பிக்கலாமல்லவா?

சர்வதேசப் புத்தக ஆண்டில் நாமும் சில முடிவுகளை எடுக்க வேண்டும். சர்வதேச அறிவுகளுக்கு நாம் என்றுமே சத்துராதிகள் அல்ல. அதே சமயம் அறிவின் பேரால் நமது நாட்டவர்களின் தலையில் மிளகாய் அரைப்பதைச் சென்ற காலத்தைப் போல இனிமேலும் அனுமதிக்க மாட்டோம்!

# முதன் முதலில் சந்தித்தேன்



கல்வயல் வே. குமாரசாமி

சொந்த ஊர் இருவருக்கும்
அதிலுமோ கொஞ்சம் சொந்தம்
சந்தித்த முதல்நாள் எனக்குச் சரியாக நினைவில் இல்லை;
அந்த நாள் பலவே.
ஆனால்; அழகியற் கலையில் ஆர்வம் முந்திக்கொண்டு எழுந்தபின்னர்
முருகையன் கவிஞரானார்; எனக்குத்தான்.
மற்றை யோர்க்கோ என்றைக்கோ தெரியும்.
எங்கள் இனத்தவர், வீட்டார் எல்லாம்
கனக்கத்தான் கதைத்தனர்;
அன்னார் கனதியை அறிந்து கொண்டோ என்னவோ;
'இராமுப்பிள்ளை வாத்தியார் மகனிங்கினைக்கை
சரியான கெட்டிக் காரன்
வாத்தியார் மனசுபோல வாச்சது கடவுளாலை!'
என்றெல்லாம் பேசிக் கொள்வார்.
எங்களின் வீட்டில் அப்போ
சுதந்திரன் எடுத்துப் பார்க்கும்
சுறுசுறுப்பான காலம்.
அதிலொரு நாளிவற்றை
அழகான படமும் போட்டுப்
புதுமுக அறிமுகத்தைப் போட்டிருந்தார்கள் நன்றாய்.
அதிலும் யான் அந்த நேரம்
அக்கறை கொள்ள வில்லை.
அண்ணர் தான் சொல்ல
அந்தப் படத்தினை மட்டும் பார்த்த ஞாபகம்
கனவு போல நினைவிடைத் தடக்குதிப்போ.

அடிக்கடி வீட்டுக்குப்போய்
கலைமகள் கண்ணன் என்றும்
எடுத்துக் கொண்டேதோ சும்மா இருக்கையில்
படிப்பேன். அப்போ
மார்கழித் திருவெம்பாவைக் காலம்.
ஊர்க் கோவில் ஒன்றில் வாதவூரடிபுராணம் வாசிப்பார்,
வருடந் தோறும்; கண்கள் சந்தித்துக் கொண்டால்

கனிவான முறுவல்
ஏதும் கதைவிட்டால் பதில் கிடைக்கும்.
இப்படிப் பட்ட
சந்திப் பிடைக்கிடை நிகழ்ந்த போதும்
இலக்கிய முதற்சந் திப்பாய் இதைக் கொள்ள முடியாது.
ஆனுல் ஏச். எஸ். சி. படிக்கும் வேளை
ஏற்பட்ட விழிப்பால் இந்த ஒப்பற்ற உறவைத் தேடும்
உந்தல் ஒன் றெழுந்தது என்னுள்.

புதுமைப் பா ஏடாம் நோக்கு
வெளிவரும் விளம்பரத்தை எதிலேயோ படித்தேன்.
இவருடன் தொடர்பு கொண்டேன். அதன் விளைவாக
வீட்டிற் கவர் வந்த நாளறிந்து
சந்தித்தேன் மகிழ்ச்சியோடு.
இவ்வள வெளிமையான இயல்பினராவென் றென்னுள்
ஐயங்கள் தோன்றி
பின்னர் அமைதியை அடைந்தேன்.
கவிதைநூல் சிலவும் கேட்டு கதையினை ஆரம்பித்தேன்.
யாழ்ப்பாணப் பிரதேசத்தின் இலக்கிய நிலைமை பற்றி
எடுபட்ட பேச்சுப் பின்னர்
எங்கெங்கோ எல்லாம் தாவி
எழுத்தாளர் கவிஞர் என்ற இவர்களைப் பற்றி யெல்லாம்
அறிந்திட முடிந்த தன்று.
அதன் பின்னர் நிகழு கின்ற
இலக்கிய விழாக்கட்கெல்லாம்
இவருடன் செல்லலானேன்.

கவிதையின் நுட்பம், ஓசை,
கனதிஎன் றிவைகள் பற்றி
அடிக்கடி எடுத்துச் சொல்வார்.
அறிவியல், கலையென் றுள்ள அவ்வழி இரண்டையும்
நன் முறையிலே அறிந்த ஞானி.
பழைய நல் லிலக்கியங்கள னத்தையு முணர்ந்த மேதை.
பழமையின் பிழை களைந்து பண்பினை வளர்க்கும் மேன்மை
நல்லுளம் கொண்ட செல்வர்.
தீட்சண்யமான பார்வை; திடமான சிந்தை
மாற்றூர் ஏ மாற்றத்தைத் தாக்கும் நேர்மை
அனைத்துமே நிறையப் பெற்ற அமைதிசேர் தோற்றம்
கொண்டவர் இந்த அண்ணன்.
கவிதையில் நாடகத்தை கண்முன்னே நடித்துக் காட்டிப்
புகழினை ஈழத்திற்கு சூட்டிய புதுமையாளர்
நாடகம் விமர்சனம்
நல்லாய்வுக் கட்டுரைகள் செய்து
நந்தமிழ் மொழி வளர்க்கும்
நல்லதோர் தொண்ட ராவார்.

# தந்தக் கோபுரங்களும் மண்வாசனைகளும்

எஸ். எம். ஜே. பைஸ்தீன்

வழமையான முக்கோணச் சிக்கலே— ஒரே பெண்ணின் பால் சகோதரர்கள் இருவரது காதல் ஈடுபாடு; அதன் முதிர்ச்சியிலே ஒருவரது கொலை; கொலைஞன் யார் என்ற வினு முதலியவற்றோடு திரைப்படக் கதை என்ற வகையில் முடிவு வரை ரசிகர்களுக்கு விறுவிறுப்பூட்டி ஆர்வத்தில் ஈடுபடுத்தி வைத்துள்ளமை, ஒரு சில பொறிநுட்பத் திறமைகள்; கருத்துள்ள — இனிமையான பாடல்கள், இசை இத்துணை அமைந்தும் சராசரிக்கு மாறுபட்ட புதிய திரைப்படமான 'சிஹின லாவக்' தலைசிறந்த கலைமுயற்சியொன்றெனக் கூற முடியாததேன்?

இத்தகைய படைப்புகளைச் சிங்கள கலை, இலக்கிய உலகில் தற்செயலான அல்லது இடையிடையிட்ட எழுச்சிகள் என்று கூறி ஒதுக்கிவிட முடியாது. ஏனெனில் கடந்த பல வருடங்களாக நிலைத்துவிட்ட ஒரு பொதுப் பண்பின் விளைவே இம் முயற்சி. திரைப்படங்களையே எடுத்துக் கொண்டால், இப் படத்தின் நடுநாயகனை பிரியந்தா குணவர்தனவை ஒத்தோரை நாம் ஏற்கெனவே சந்தித்துத்தான் உள்ளோம். லெஸ்டரது 'தெலொவக் அத்தா' (இருவுலகங்கட்கிடையில்) வில் வாழ்பவன், 'தஹசக் சித்துவிலி' களைக்காண்பவன் பிரியந்தாவின் சகபாட்டிகளே. இவர்களது நோக்கு கனவுலகொன்றினைக் கடந்த இலட்சிய வேட்கை போலத்தான் தோன்றும். 'சிஹின லொவக்' படத்தில், தற்போது சிங்களத்தின் உயிர்த் துடிப்புள்ள புதிய கவிஞர்களுள் ஒருவரது (மஹகம சேகர) பாடல் அடிகளின்படி இவ்வுலகம், 'ஜாதி பேத கவலையற்ற உலகம், அங்கு பாய்வது அனைவருக்கும் ஒரே இரத்தம்' இது உறுதியான இலட்சிய வேட்கையே.

இப்படிப்பட்ட இலட்சியங்களுடன் ஒதுக்கித்தள்ளப்பட்ட அல்லது தானே ஒதுங்கிக் கொண்ட ஒரு சமூகப் பிண்டமாக பிரியந்தா உலவுகிறான். 'லட்சக் கணக்கில் பணம் — ஆயிரக்கணக்கில் பெண்கள்' என்ற போக்கில் தந்தை தோமஸ் குணவர்தனவினது


வாழ்க்கையால் அவனுக்குரிய சமூக அமைப்பு முறையிலிருந்து 'அந்நியப்பட்டு'ப் போனவன் அவன்.

இத்தகு கதாபாத்திர மொன்றினை உடைய 'சிஹின லொவக்' படத்தை ஒரு தற் செயலான நிகழ்ச்சியாக விட முடியாமைக்கு ஒரு காரணம் இதனை உருவாக்கி அளித்த படக்கம்பனி பற்றியதாகும். இவர்களது முதல் படமாகிய 'சத்சமுத்ர' வுடன் தொடர்பு டைய கலைஞர் சிரி குணசிங்ஹ, நவீன சிங்கள இலக்கியப் போக்குகளுள் ஒன்முன 'நிஸந் தஸ்' யாப்பமையப் புதுக்கவி தை வளர்ச்சிக்கு 'உயிரும் உரு வும்' வழங்கியவர்.' இவரது 'ஹெவனெல்லே' நாவலின் கதாநாயகனுன ஜினதாசவிலே பிரியந்தாவை இயைபு காண முடிகிறது. எனவே இத்தகைய தொரு இலக்கிய கர்த்தாவினது பாதிப்பை இங்கு உணர முடிகி றது. தனிமனித அவசங்களா கக் கூறத்தக்க நிஸந்தஸகளைப் படிக்கும்யோது ஏற்படும் சுவை உணர்வு, ஹெவனெல்லே நாவ லது உள்மன உணர்வோட்டம் முதலியவை படத்தைப் பார்த் துக் கொண்டிருக்கும்போது உண் டாவதைத் தவிர்க்க முடிய வில்லை. இதற்கு அடிப்படையே பிரியந்தா தனது தந்தை தோ மஸ் குணவர்தனு, சகோதரன் அஜந்தா, நண்பன் டக்னஸ் போன்ருேர் அமைதி காண்ப தைப் போல தனது வர்க்கத் தின் பண்புகளை வெளிப்படுத் தாமல் அவற்றை மீறுவது போன்ற போலியுணர்வால் அந்நியப்பட்ட தன்மையே.

எனவே திஸாநாயக்கா பிலிம்ஸின் கன்னி முயற்சியான சத்சமுத்ரவினது யதார்த்தப் பாங்கிலிருந்து, அடுத்தவை 'வெஸகத்தோ சிஹினலொவக்' என்பன நடுத்தர வர்க்க அல் லது மேட்டுக்குடியினரது போலி வாழ்வுப் பக்கத்தின்பால் வில கிச் செல்லும் ஒரு போக்கினைக் காட்டுகின்றன.

இக் கற்பனை உலகினது உருவாக்கம் எழுத்தாளர்கள் கலைஞர்கள் ஏறியுள்ள தந்தக் கோபுர வாசத்தின் விளைவே யாகும். கடந்த பதினறு ஆண் டுகளாக சிங்கள கலை இலக்கிய உலகை இப்பிரமை பீடித்துள் ளது. மார்ட்டின் விக்கிரமசிங் ஹவினது 'கம்பெரலிய', 'கலி யுகய', 'யுகாந்தய' போன்ற வற்றுடன் யதார்த்தப் பாங்கு ஆரம்பமானது. அவருடைய 'விராகய' 1956-இல் வெளி யாகிய உடனேயே அவ் யதார்த்த நோக்கு சிதறலா னது. கலாச்சாரங்களது கலப்பு வர்க்கங்களின் நசிவு, பழமை யின் சீர்குலைவு என்பன தனி மனிதர் சமூகத்திலிருந்து அந் நியப்பட வைத்தன. இதனுல் மேலைநாட்டு அளவு கோல்களு டன் இலக்கியங்கள் அமையவும், கட்டற்ற மனிதவுணர்வுகளை யும், நடத்தைகளையும் சித்திரிக் கவும் இடமெழுந்தது.

இந்நிலையின் ஒரு விளைவே கலைஞர்களது பாபோச்சார ணம் — பாவ நிவேதனம் அல் லது கழிவிரக்கமாகும். தனது 'ஆரம்பகாலப் படைப்புக்கள் மேலே உந்துதலில் விளைந்த அபத்தங்கள்' எனத் துணிந்து முதலிற் கூறியவர் குணதாச அமரசேகர.



# மகத்தான மக்கள் தலைவன்

கடந்த கால் நூற்றாண்டுக் காலமாக இடைவிடாது தொடர்ந்து சகல மக்களின் பிரதிநிதியாகவும் ஒரேயொரு பிரதிநிதி தெரிவு செய்யப்பட்டு வந்துள்ளார் என்றால் அது தோழர் **பீட்டர் கெனமனே** ஆவார்.

பல கட்ட நெருக்கடிகளுக்கு மத்தியிலும், பல வேறுபட்ட அரசாங்க அமைப்புகளுக்குள்ளும் பல முனைகளில் நின்று 25 ஆண்டுகளாக மக்களுக்காகப் போராடியவர் இவர் ஒருவரே.

இன்னும் பலகாலம் இவர் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

— ஆசிரியர்

★

'யலி உபன்னேமி' 'தெபா நொலத்தோ' போன்ற தனது படைப்புகளில் தான் ஏறியிருந்தது தந்தக்கோபுரமே என்பதையும், அதிலிருந்து இறங்கி மண்ணுக்கு வர முயல்வதையும் குணதாச அமரசேகரவினது புதிய சிறுகதைத் தொகுதி காட்டுகிறது. பாவ நிவேதனத்திலிருந்து செயல்பாட்டுக்கு வர அவருக்கு மூன்று ஆண்டுகள் பிடித்துள்ளன.

'எக்டெமின் பொலொவட்ட' (தந்தக் கோபுரத்திருந்து மண்ணுக்கு) என்ற இச் சிறுகதைத் தொகுதி சிங்கள இலக்கியவுலகில் ஒரு மறுமதிப்பீட்டை ஏற்படுத்தியுள்ளது. இச் சூழலில் சிங்கள இலக்கியவுலகம் ஏறியிருந்த தந்தக் கோபுரம் எப்படிப்பட்டது? மண்வாசனையை நாடி அது இறங்கி வந்துள்ளமை பிரக்ஞைபூர்வமானதா? சமீப காலங்களில் மண்குடிவாச எழுத்தாளர்கள் தோன்றவே இல்லையா? எனும் கேள்விகளை அலசுதல் பொருத்தமே. இதன் மூலம் கடந்த 15 ஆண்டு காலப்பகுதியில் சிங்கள கலை இலக்கிய வுலகின் உண்மையான நிலையை அறிதலும் சாத்தியமாகும். ★

சிறுகதை

சிவா. சுப்பிரமணியம்



# ஒரு கிராமவாசியின் பட்டணப் பயணம்

விடிந்தும் விடியாத ரம்மியமான காலைப் பொழுதின் குளிர்மைக்கு எதிர்மாருக கனகசுந்தரத்தின் உள்ளமும் உடலும் தீயாகத் தகித்தன.

காரின் கதவை அறைந்து மூடிவிட்டுக் கடுகடுப்போடு அவர் பங்களாவுக்குள் நுழைந்ததைப்பார்த்த ட்ரைவர் 'இந்த ஐயாவுக்கு இன்று ஏன் இவ்வளவு கோபம்' என்று நினைத்தபடி காரைக் கராச்சுக்குள் கொண்டுபோய் விட்டான்.

சப்பாத்தை மட்டுமே கழற்றிவிட்டு அப்படியே படுத்தவருக்குச் சொகுசான அந்த மெத்தைகூட முள்ளாகக் குத்தியது. அறைக்குள் வந்த மனைவியை ஆத்திரத்தோடு முறைத்துப் பார்த்தார். சில நிமிடங்களாக இரண்டு சோடிக் கண்கள் ஒன்றையொன்று சுட்டெரித்தபின் பத்மா வெளியே சென்றுவிட்டாள்.

எட்டரை மணியளவில் காரியாலயத்திற்கு டெலிபோன் செய்து லீவு போட்டுவிட்டுக் குளிக்கப்போனுர் கனகசுந்தரம்.

நான்கு நாட்களுக்கு முன் ஊருக்குப் போனவர் இன்றுதான் திரும்பியிருக்கிருர். திருமணத்திற்குப் பின் இது அவருடைய இரண்டாவது பயணம். முன்பு பத்மாவோடு போய் அங்கே அவள் நடந்துகொண்ட முறையும் அதனுல் அவருக்கு ஏற்பட்ட அவமானமும் இந்தப் பயணத்தில் மீண்டும் கிளறப் பட்டதாலேயே அவருடைய இதயம் கொதித்துக் கொண்டிருக்கின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய ஒரு கிராமத்திலே பிறந்து கிராம வாசனையோடு வளர்ந்த கனகசுந்தரம் இன்று பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சில் ஒரு சிரேஷ்ட அதிகாரி. சிறு வயதிலேயே தாய்தந்தையரை இழந்த அவர் உறவினரின் உதவியோடு மிகவும் கஷ்டப் பட்டுத்தான் பட்டப்படிப்பை முடித்தார். ஆனுல் உயர்மட்ட உத்தியோக வட்டாரத்தில் புகுந்ததும் சக உத்தியோகத்தரின் வாழ்க்கை முறையிலிருந்து வேறுபட்டுத் தன்னுடைய தனித்துவத்தைப் பாதுகாப்பதற்கான மனத்தை

ரியம் அந்தக் கிராமவாசிக்கு இருக்கவில்லை. மற்றவர்களிட மிருந்து வேறுபடுவது தன்னையே தாழ்த்திக் கொள்வதாக முடியும் என்றே அவர் கருதினார். தன்னுடைய தரத்திலுள்ள உத்தியோகத்தரோடு எல்லாவிதத்திலும் சமநிலையில் இருக்க வேண்டுமென்ற ஒரு தவிப்பைச் சமூக அமைப்பு அவரிடத்தில் ஏற்படுத்தியது.

இப்படியான தவிப்பைத் தீர்ப்பதற்காகத் தவிக்கின்றவர்களை வலைபோடும் பணக்காரர்களுள் ஒருவரின் பார்வை இவர்மீது பட்டதால் அந்தப் பணக்காரருடைய மகளின் கணவர் என்ற உறவை ஏற்றுக் கொண்டு கப்பல் போன்ற காருக்கும் கறுவாக்காட்டு பங்களாவுக்கும் உரிமையாளரானார்.

அமைதியும் ஆழமும் நிறைந்த கிராம வாழ்க்கையும் படபடப்பும் பகட்டும் நிறைந்த பட்டண வாழ்க்கையும் ஒன்றையொன்று வெற்றி கொள்ளத் துடிக்கின்ற ஒரு பந்தயத்தின் ஆரம்பமாகவே அத் திருமணம் நடந்தது.

முதல் வாரம் முழுவதும் விருந்துகளும் கேளிக்கைகளுமாக முடிந்தபின் இரண்டாவது வாரத்தின் ஆரம்பத்திலேயே இனங்கான முடியாத ஏதோவொன்று தங்களுக்கிடையிலேயே தலைதூக்கி இதயங்களை இணையவிடாமல் தடுத்துக் கொண்டிருப்பதாக இருவருமே உணர்ந்தனர்.

பந்தயத்தில் பட்டண வாழ்க்கையே வென்றது. ஆனால் வெற்றிகொண்ட வீராங்கனையோ ஏதோ ஒரு காரணத்தால் தோற்றுப் போனவளாகவே இருந்தாள்.

இருவரின் இதயங்களுக்கும் இடைப்பட்ட இடைவெளி மேலும் வளரத்தக்க வகையில் மூன்று மாதங்களின் பின் ஒரு சம்பவம் நடந்தது.

யாருக்கும் அறிவிக்காமல் கனகசுந்தரம் திருமணம் செய்த செய்தி எப்படியோ ஊரிலுள்ள உறவினர்களுக்குத் தெரிய வந்தது. கனகசுந்தரத்தின் இச் செயலுக்காக இரத்த உறவை உதறியெறிய அவர்கள் விரும்பவில்லை. மனைவியோடு ஒருமுறை வந்து போகும்படி அழைப்புக்கு மேல் அழைப்பு விடுத்துக்கொண்டிருந்தார்கள். தொடர்ந்து தட்டிக் கழித்துக்கொண்டிருக்க முடியாத நிலையில், பத்மாவும் கனகசுந்தரத்தோடு கிராமத்திற்குப் புறப்படவேண்டி ஏற்பட்டது. அங்கே அவள் நடந்து கொண்ட முறை கனகசுந்தரத்தின் முகத்தில் கரி பூசுவதாகவே இருந்தது.

கனகசுந்தரத்தின் உறவினர்கள் எல்லோருமே ஏழைகள். இப்படியான ஏழ்மையிலும் மக்கள் வாழ முடியும் என்று அவள் கனவுகூடக் கானவில்லை. அங்கு போன அடுத்த நாளே கொழும்புக்குத் திரும்ப வேண்டுமெனத் துடியாகத் துடித்தாள். விருந்துக்கு வரும்படி பலர் வந்து அழைத்தபோதும் அவள் பிடிவாதமாக மறுத்துவிட்டாள். எனவே அடுத்த நாளே கொழும்புக்குப் புறப்படுவதைத் தவிர, கனகசுந்தரத்தால் வேறெதுவும் செய்ய முடியவில்லை.

கொழும்புக்கு வந்ததும் அந்தக் கிராமத்திற்கு இனிமேல் தான் வரமாட்டேனென்று திடமாகக் கூறிவிட்டாள்.

'தட் இஸ் எ ஹெல். ஐ வில் நெவர் கம் தெயர்'

பத்மாவின் இந்தப் போக்குக் கோபத்தை ஏற்படுத்திய போதும் பொறுத்துக் கொண்ட கனகசுந்தரம், மீண்டும் ஊருக்குப்போனபோது அந்தப் பழைய நினைவுகள் கிளறப்பட்டதால் இப்போது கொதித்துக் கொண்டிருக்கிறார்.

இரண்டு மணியாகிவிட்டது. இன்னும் அவர் சாப்பிடவில்லை.

அவர் சாப்பிடவில்லையென வேலைக்காரி வந்து சொன்னதால் அவரை அழைக்கப் போனாள் பத்மா.

'சாப்பிட வாருங்கோவன்'

'எனக்குச் சாப்பாடு தேவையில்லை. நீ வெளியே போனால் போதும்'

'ஏன் ஏறி விழுகிறீர்கள்'

'வாயை மூடு. உன்னால் தான் எனக்கு எல்லாம் வந்தது'

'இப்போதாவது ஒத்துக் கொள்கிறீர்களே. என்னால் தானே இந்தச் சுகபோகங்களெல்லாம் உங்களுக்குக் கிடைத்திருக்கின்றன'

கனகசுந்தரம் எதுவும் பேசவில்லை. பத்மாவின் அந்தத் திமிரான பேச்சிலே தொனித்த அர்த்தத்தை அவர் புரிந்து கொண்டார். ஊரிலிருந்து வரும்போது அவளிடமிருந்து விலகிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு வந்தவரிடமிருந்து அந்த எண்ணமே இப்போது விலகி ஓடியது.

அவளிடமிருந்து ஒதுங்குவதால் அவள் மூலம் கிடைத்த சௌகரியங்களிலிருந்தும் ஒதுங்கவேண்டி வருமென்பதும், அதனால் தன்னை மதித்து நடத்துபவர்களுக்கு முன்னால் தான் மதிப்பிழந்து நிற்கவேண்டிய நிலை ஏற்படும் என்பதும் அவருக்கு நன்றாகத் தெரியும். அந்த நினைவே பயங்கரமாக இருந்தது.

பறிகொடுக்கக் கூடாத எதையோ பறிகொடுத்தவளைப் போல எந்த நேரமும் ஏக்கத்தோடும் பெருமூச்சுக்களோடும் இருந்த பத்மாவின் போக்கு திடீரென மாறத்தொடங்கியது.

சிருங்கார ரசம் தொனிக்கும் சினிமாப் பாடல்களைக் குறித்தும் முழுவதுமாகத் தன் மனம்போனபடி மெல்லிய குரலில் இசைக்கத் தொடங்கினாள். மாலை நேரங்களில் சாரியின் வலது பக்கத்தை இடையிலே தூக்கி இடுப்பிலே செருகியபடி முற்றத்திலுள்ள ரோஜாச் செடிகளுக்குத் தண்ணீர் விடும்போது அடுத்த வீட்டு மாடியைப் பத்மா அடிக்கடி 'தற்செயலாகத்' திரும்பிப் பார்ப்பதையும் அந்தமாடியில் அழகான ஒரு வாலிபன் சிரித்த முகத்தோடு அவளையே பார்த்துக் கொண்டு நிற்பதையும் தன்னுடைய அறையிலிருந்து எத்தனையோ நாட்கள் கனகசுந்தரம் பார்த்திருக்கின்றான். பார்த்துத் தான் என்ன பயன்?

அணைப்பதில் மட்டுமே வாழ்க்கையைக் 'கண்டு' கொண்டிருந்தவள் அணைக்கப் படுவதில் அதை 'உணரத்' தொடங்கிய பின்.........

பணக்காரத் தம்பதிகள் தங்களுக்கிடையிலான பிணக்குகளும் சச்சரவுகளும் வெளியுலகுக்குத் தெரியக்கூடாதென்ப

தற்காக விழாக்களையும் கேளிக்கைகளையும் விமரிசையாகக் கொண்டாடும் மேட்டுக்குடி நியதிக்கமையக் கனகசுந்தரமும் பத்மாவும் தங்கள் திருமணத்தின் ஓராண்டு நிறைவை மிகவும் விமரிசையாகக் கொண்டாடுவதற்குத் தீர்மானித்தனர்.

'டல் லைட்' மங்கலாக ஒளி பரப்பிக் கொண்டிருக்கிறது. டேப் ரிகாட்டரில் மேலை நாட்டுச் சங்கீதம் ஒலிக்கின்றது. சின்னச் சின்ன மேசைகளைச் சுற்றி ஆண்களும் பெண்களுமாக அரட்டையடித்துக்கொண்டிருக்கிறார்கள். கனகசுந்தரம் ஒவ்வொரு மேசையாக மாறி மாறி இருந்து நண்பர்களோடு உல்லாசமாகக் கதைத்துக் கொண்டிருக்கிறார்.

பத்மாவின் முகத்தில் மகிழ்ச்சியே இல்லை. யாராவது வரும்போது சம்பிரதாயத்திற்காகக் கைகுலுக்கி வரவேற்றுவிட்டுப் பழையபடி சோகபிம்பமாக நிற்கிறாள். அடிக்கடி வாசலையே திரும்பிப் பார்ப்பதிலிருந்து அவள் யாரையோ எதிர்பார்க்கிறாளெனத் தெரிகின்றது.

எதிரெதிராக இருந்த இரண்டு கனவான்களுடன் கனகசுந்தரம் கொஞ்சநேரம் இருந்து கதைத்துவிட்டுப்போன பின் அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்கிறார்கள்.

'தே ஆர் நொட் புல்லிங் ஒன் வெல். அவர்களுக்குள் ஏதோ ஃபாமிலி ட்ரபிள்.'

'இப்படி நடக்குமென்று எனக்கு முன்பே தெரியும்.'

'எப்படி?'

'அட்வகேட் மகேசனுக்கு மகன் பிறந்ததற்கான ஃபங்ஷனில் கற்கண்டு கொடுத்தார்கள். மிஸிஸ் கனகசுந்தரம் அந்தக் கற்கண்டை மணித்தியாலக் கணக்காக வாயில் வைத்துச் சுவைத்துக் கொண்டிருந்தார். ஆனால் கனகசுந்தரமோ அதை வாயில் போட்டதுகூடத் தெரியாமல் கடித்துச் சாப்பிட்டுவிட்டார்.'

மற்றவருக்கு எதுவுமே புரியவில்லை. எல்லாமே புரிந்து கொண்டவர்போல 'ஓ ஐ சீ' என்று சொல்லிவிட்டு வேறு விசயத்தைப் பற்றிப் பேசத் தொடங்கினார்.

திடீரெனப் பத்மாவின் முகம் மலர்ந்தது.

அடுத்த வீட்டு வாலிபன் கேட்டைத் தாண்டிக் கம்பீரமாக வந்துகொண்டிருக்கிறான்.

பத்மா ஓடிச்சென்று அவனை வரவேற்றுவந்து தன் சினேகிதிகளுக்கு அறிமுகம் செய்துவிட்டு அவர்களுக்கு அருகிலேயே அவனை அமரச்செய்கிறாள்.

கனகசுந்தரம் நண்பர்களின் கதையிலே கலந்து வாய்விட்டுச் சிரித்தபோதும் முகத்தில் ஏற்பட்ட மாற்றத்தை அவரால் மறைக்க முடியவில்லை. ★

---

## இன்பம்

அவன் ஆசை மகன்
ஆத்திரமாய் அவனை அடித்திட
அவ்வடி
ஆசையாய் அவனைச் சீண்டிற்று.

தேவன் ரெங்கன்

---

# சஞ்சிகையாளர் ஒன்றியம்

பேட்டி: பிரேம்ஜி.          பேட்டி கண்டவர்: யாதவன்.

**சமீப காலமாக ஈழத்து இலக்கிய உலகை பரபரப்படைய வைத்த சூடுள்ள பிரச்சினை சம்பந்தமாக ஒன்றியத்தின் செயலாளர் பிரேம்ஜி அவர்களின் பேட்டியை இங்கு பிரசுரிக்கின்றோம்.**

**கேள்வி:** இந்திய சஞ்சிகைகளின் எல்லையற்ற இறக்குமதியைக் கட்டுப்படுத்தியதன் மூலம் நீங்கள் எதிர்பார்த்த பெறுபேறுகள் கிடைத்துள்ளனவா?

**பதில்:** இந்திய வர்த்தக சஞ்சிகைகளின் கங்கு கரையற்ற 'படையெடுப்பு' ஈழத்துத் தேசிய தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்ற கருத்தை நாம் முன்வைத்தபோதும், பின்னர் இதை ஒட்டிய நடவடிக்கைகள் பற்றி சுமார் ஓராண்டு காலமாக ஆராய்ந்த போதும் இந்த இறக்குமதியில் சில கட்டுப்பாடுகளைக் கொண்டுவருவதன் மூலம் நாம் சில எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருந்தோம்.

இந்திய சஞ்சிகைகளின் இறக்குமதி கட்டுப்படுத்தப்படுவது இங்கு குற்றுயிரும், குறையுயிருமாகச் சாவுடன் போராடிக்கொண்டிருந்த ஈழத்துச் சஞ்சிகைகள், சற்றே 'மூச்சுவிட' அவகாசம் கிடைப்பதன் மூலமும் தம்மை ஓரளவு ஸ்திரப்படுத்திக் கொள்ளும் என்று எதிர்பார்த்தோம்.

இந்திய சஞ்சிகைகளின் இறக்குமதி குறைவதால் ஏற்படும் 'வெற்றிடத்தை' நிரப்புவதற்கு ஈழத்து சஞ்சிகைகள் பல புதிதாக மலரும் என்று நாம் எதிர்பார்த்தோம்.

இந்தியசஞ்சிகைகள் கட்டுப்படுத்தப்படுவதுடன் ஈழத்துத் தமிழ் மக்கள் மத்தியில், குறிப்பாக இலக்கிய ரசிகர்கள் மத்தியில் புதிய விழிப்பும் தேசிய உணர்வும் நமது எழுத்தாளர்களின் சஞ்சிகையாளர்களின் முனைப்புகளுக்கு கைகொடுத்துதவ வேண்டும் என்ற பிரக்ஞையும் தோன்றும் என நாம் எதிர்பார்த்தோம்.

கலை, கலாசாரம், இலக்கியம், அறிவியல், பொருளாதாரம், அரசியல் மற்றும் தேசியத் தேவைகளுக்கு ஏற்ப, இந்த நானாவிதத் தேவைகளை ஈடு செய்யும் விதத்தில் பல்துறை சஞ்சிகைகள் தோன்றும் என நாம் எதிர்பார்த்தோம்.

இந்திய வர்த்தக சஞ்சிகைகளின் இறக்குமதி கட்டுப்படுத்தப்படுவதுடன் இவற்றைப் பாவனை செய்யும் சஞ்சிகைகள் ஈழத்தில் தோன்ற ஆரம்பிக்கும் சாத்தியப்பாட்டை நாம் கணித்தபோதிலும், ஈழத்துத் தேசிய இலக்கியத்தின் கனமான மரபுக்கு ஏற்ப தரமான சஞ்சிகை

கள் வெளிவரும் என்றும் நாம் எதிர்பார்த்தோம்.

இந்த எதிர்பார்ப்புக்களை இந்த ஆறுமாத காலப்பகுதி ஓரளவுக்கு நியாயப் படுத்தி உள்ளது. ஏற்கனவே வெளி வந்து கொண்டிருந்த சஞ்சிகை கள் தம்மைக் குறிப்பிட்டளவு ஸ்திரப்படுத்திக் கொண்டுள் ளன. புதிதாக சுமார் இருப துக்கும் மேற்பட்ட சஞ்சிகைகள் தோன்றியுள்ளன, மேலும் பல வெளிவரவிருக்கின்றன. ஈழத் துச் சஞ்சிகைகளை வரவேற்கும் தேசாபிமான எழுச்சி நமது மக்கள் மத்தியில் வியாபிக்க ஆரம்பித்துள்ளதையும் நாம் மனமகிழ்வுடன் அவதானத்தில் கொள்கிறோம்.

இவை நாம் எதிர்பார்த்த நல்ல பெறுபேறுகள்தான். என்றாலும் சஞ்சிகைகளின் தரம், உள்ளடக்கம், பலதுறை வியாபகம், தேசிய நோக்கு. ஈழத்தின் இலக்கிய மரபுக்கு ஏற்ற வளர்ச்சிப் போக்குகள் ஆகியவற்றைப் பொறுத்த மட் டில், இந்திய வர்த்தக சஞ்சிகை களை எதிர்த்த போராட்டத் தின் எதிர்பார்ப்பு நிறைவு பெறுவதாகத் தெரியவில்லை. பதிலாக ஒரு விழுக்காட்டை யும் கவனிக்க முடிகிறது. வளர்ச்சியின் ஆரம்பத்தசையில் இது ஓரளவு 'இயல்பா' கக்கூட இருக்கலாம். ஆனால் இந்த எதிர் மறை அம்சங்களைப் பொறுத்து நாம் ஓய்வொழிச்சலற்ற, விட் டுக்கொடுப்பற்ற, ஏன் தயவு தாட்சண்யமற்ற போராட்டத் தை நடத்தியே ஆகவேண்டும்.

கே. ஈழத்து சஞ்சிகைகளின் வளர்ச்சிக்கு நீங்கள் எத்த கைய நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறீர்கள்?

ப. 'ஈழத்துத் தமிழ் சஞ்சிகை களின் வளர்ச்சியும் பிரச்சி னைகளும் தீர்வு மார்க்கங்களும்' என்ற மகுடத்தின்கீழ் சஞ்சிகை யாளர்களின் முதலாவது மகா நாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை ஈழத்து சஞ்சிகைக ளின் பிரச்சினைகளையும், இவற் றின் தீர்வு மார்க்கங்களையும் சஞ்சிகையாளர்களும் அரசும் எடுக்க வேண்டிய நடவடிக்கை களையும் விஸ்தாரமாக விளக் கியது. இதைக் கால்கோளாக வைத்து சஞ்சிகையாளர் ஒன்றி யம் தனது அமைப்பு விதிகளி லும் அவ்வப்போது எடுத்த முடிவுகளிலும் பல திட்டங்களை முன்வைத்துள்ளது.

சஞ்சிகையாளர் கூட்டுறவு நிறுவனத்தை அமைப்பது, சஞ் சிகையாளர்களுக்கு ஸ்தூலமான உதவிகளை வழங்குவது. சஞ்சி கையாளர்கள் முன்னுலுள்ள தயாரிப்பு, விநியோகம், விற்ப னைப் பிரச்சினைகள் பற்றிக் கருத்தரங்குகளை நடத்தி சஞ்சி கைகளை வெளியிடுவதுடனும் விநியோகிப்பதுடனும் சம்பந் தப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து அனைத்து சஞ்சிகையா ளர்களும் பரந்த விளக்கத்தை ஏற்படுத்துவது; சஞ்சிகையா ளர்களுக்கும் வாசகர்களுக்கும் இடையில் நெருங்கிய பிணைப்பை ஏற்படுத்தவும் சஞ்சிகைகளின் வளர்ச்சியிலும் வியாபிதத்தி லும் வாசகர்களை உணர்வு பூர் வமாகப் பங்குபற்றச் செய்ய வும் வாசகர் வட்டங்களை அமைக்கத் தூண்டுவதும் உட்பட கல்வி அமைச்சு, கலாசார அமைச்சு மூலம் ஒரு குறிப்பிட் டளவு சஞ்சிகைகளை வாங்க ஏற் பாடு செய்வது; காலப்போக் கில் மற்றும் பல நடவடிக்கை களும் தேவை, வளர்ச்சி நிலை ஆகியவற்றைப் பொறுத்து மேற்கொள்ளப்படும்.

கே. சஞ்சிகை வளர்ச்சிக்கு அரசாங்கம் எத்தகைய உதவிகளை வழங்கலாம் என எதிர்பார்க்கிறீர்கள்?

ப. நியாய விலையில் கடதாசி, கூட்டுத்தாபன விளம்பரங்கள், வங்கிக் கடன் உதவி, அச்சக சாதன வசதிகள், பாடசாலைப் பொது நூலகங்களுக்காக ஈழத்து சஞ்சிகைகளை வாங்குவது, இந்திய சஞ்சிகைகளை விற்பவர்கள் அதே அளவு ஈழத்து சஞ்சிகைகளை விற்க வேண்டும் என்ற ஏற்பாடு, சிறந்த ஈழத்து சஞ்சிகைகளுக்கு ஆண்டுதோறும் பரிசு, ஏற்றுமதி ஏற்பாடுகள் ஆகிய நடவடிக்கைகளை அரசு செய்து கொடுக்கலாம் என நாம் கருதுகிறோம். இவற்றில் சிலவற்றையாவது ஆரம்பத்தில் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பல்வேறு அரசாங்க அமைப்புகளுக்கூடாக இவைகள் செயல்படுத்தப்படவேண்டியிருப்பதால் பல முனை முயற்சிகள் தேவைப்படுகின்றன.

என்றாலும் இங்கு ஒன்றை வலியுறுத்த விரும்புகின்றேன். எல்லாவற்றிற்கும் அரசாங்க உதவியை எதிர்பார்க்கும் நிலை மாறவேண்டும். அரசாங்கம் தக்க சூழலையும் வாய்ப்புக்களையும் உருவாக்கிக் கொடுக்கும் நிலையைச் சாதகமாகக்கொண்டு நமது தேவைகளையும் கடமைகளையும் நாமே நிறைவேற்ற உறுதி கொள்ளவேண்டும்.

கே. இந்த அர்த்தத்தில் தானா சஞ்சிகையாளர் கூட்டுறவை நிறுவத் திட்டமிட்டிருக்கிறீர்கள்? இந்த அமைப்பு சஞ்சிகையாளர்களுக்கு எந்த வகையில் உதவும்?

ப. பிறரின், குறிப்பாக அரசின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெறும் அதே வேளையில்; தமது கடமைகளைத் தாமே முன்னின்று நிறைவேற்றுவது, தமது பிரச்சினைகளைத் தாமே தமது முனைப்பு மூலம் தீர்ப்பது என்ற நியதிக்குட்பட்டதே இந்த முயற்சியாகும். ஈழத்து சஞ்சிகையாளர்களுக்கு நியாய விலையில் கடதாசி, மை மற்றும் உபகரணங்களை இடை முறிவின்றி கொடுக்க ஏற்பாடு செய்வது, இந்திய சஞ்சிகைகளின் விநியோகத்துடனும், விற்பனையுடனும் ஈழத்துச் சஞ்சிகைகளினது விநியோகத்தையும் இணைக்கும் திட்டத்தைச் செயல்படுத்த முக்கியமான இந்திய சஞ்சிகைகளின் இறக்குமதியைக் கையேற்பது, இந்த ஏற்பாட்டின் அடிப்படையில் ஈழத்து சஞ்சிகைகளை இந்தியா உட்பட தமிழ்கூறும் நல்லுலகிற்கு ஏற்றுமதி செய்யும் முயற்சிகளை மேற்கொள்வது, நியாய விலையில் சஞ்சிகையாளர் அச்சக சாதனங்களைப் பெற உதவுவது, அச்சகம் அமைத்து குறைந்த கட்டணத்தில் சஞ்சிகைகளை அச்சிட்டு உதவுவது உட்பட சஞ்சிகை வளர்ச்சிக்கு உசிதமான ஏனைய நடவடிக்கைகளையும் ஒன்றியம் அமைக்கவிருக்கும் கூட்டுறவு அமைப்பு மேற்கொள்ளும்.

இந்தக் கூட்டுறவு அமைப்பை நிறுவுவதற்கான தயாரிப்பு வேலைகள் பூர்த்தியாகி வருகின்றன. இந்த அமைப்பினதும் இந்த உத்தேசத் திட்டங்களினதும் செயலாக்கமும் வெற்றியும் சஞ்சிகையாளர்களின், அவர்களின் உணர்வு பூர்வமான கூட்டு முயற்சியிலேயே தங்கியுள்ளன. இவற்றை வெற்றிகரமாக்குவது முற்று முழுக்க அவர்களைப் பொறுத்தது.

கே. சஞ்சிகையாளர், சஞ்சிகை வளர்ச்சியின் இன்றைய கட்டத்தில் கவனம் செலுத்த வேண்டிய பிரதான பிரச்சினைகள் எவை என்று கருதுகிறீர்கள்?

ப. ஆறு கேந்திரப் பிரச்சினைகளில் சஞ்சிகையாளர்களின் கூர்மையான கவனம் குவிய வேண்டும். ஒன்று சஞ்சிகைகளின் இலக்கு அல்லது இலட்சியம். இரண்டாவது சஞ்சிகைகள் யாருக்காக, சமூகத்தின் எந்தப் பிரிவினருக்காக நடத்தப்படுகின்றன என்ற நிர்ணயிப்பு. மூன்றாவது, தமது வாசகர்களின் அறிவு நிலைத் தேவைகள் பற்றிய கவனிப்பும் வாசகர்களுடனான உறவும். நான்காவது, சஞ்சிகைகளின் தயாரிப்புப் பிரச்சினைகள். ஐந்தாவது, விநியோக, விற்பனைப் பிரச்சினைகள். ஆறாவது, சஞ்சிகைகளின் நிர்வாகமும் நிர்வாகத் திறனும்.

சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் தமக்கென்றே தேர்ந்தெடுத்த இலட்சியங்களையும் இலக்குகளையும் கொண்டிருப்பது அவசியம். அப்போதுதான் அவை சமுதாய ரீதியாகப் பயனுள்ளவையாக இருக்கமுடியும். சமூக ரீதியில் பயன் அற்றவை, ஏதாவதொரு சமூக நோக்கத்தை அல்லது சமூகப்பணியை நிறைவேற்றுதலை சமூகத்தால் ஏற்கப்பட வேண்டுமென்றோ, அல்லது சமூகத்தின் ஆதரவு தமக்குக் கிடைக்க வேண்டுமென்றோ எதிர்பார்க்க தார்மீக உரிமையற்றவையாகும். ஒரு குறிப்பிட்ட இலட்சியத்தை அல்லது நோக்கத்தை ஒரு சஞ்சிகை முன்வைத்து, அதற்காகப் போராடும் போதுதான் அதைச் சுற்றி ஒரு வாசகர் பெருங் கூட்டம் திரளமுடியும். சஞ்சிகையின் வெற்றிக்கு இது மீற முடியாத அடிநிலையாகும்.

சஞ்சிகைகளை யாருக்காக, சமூகத்தின் எந்தப் பிரிவினருக்காக நடத்துவது என்ற கணிப்பு இருந்தால்தான், அந்தப் பகுதியினருக்குத் தேவையான விஷயங்களுடன் அவர்களை அடைய முடியும். ஒவ்வொரு சஞ்சிகையும் தனக்கென ஓர் உறுதியான சமூக அடித்தளத்தை உருவாக்க இந்தக் கணிப்பு அத்தியாவசியமானதாகும்.

இவைபோக தயாரிப்பும் (இதில் கையாள வேண்டிய பல்வேறு உத்திகள், கவர்ச்சிப் பாங்குகள்) விநியோகமும் விற்பனையும் திறனுள்ள நிர்வாகம் ஆகியவையும் சஞ்சிகைகளின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் உயிர் போன்றவை.

கே, பலதுறை சஞ்சிகைகள் பற்றி பிரஸ்தாபித்து வருகிறீர்களே இதை விளக்குவீர்களா?

ப. சஞ்சிகையென்றால் இலக்கிய சஞ்சிகை அல்லது பொழுது போக்குச் சஞ்சிகை என்ற ஒரு கருத்து நிலவிவருகிறது. இலக்கிய சஞ்சிகைகளைப் பொறுத்தமட்டில் இவை உதாசீனப்படுத்த முடியாத தேவையாகும். இலக்கியத்துறை ஆர்வலர்களினதும், சுவைஞர்களினதும் தேவையை இது ஈடு செய்வதுடன், இலக்கிய வளர்ச்சிக்கும் இது தனது மகத்தான பங்குப் பணியைச் செலுத்துகிறது.

பொழுது போக்கு சஞ்சிகைகளைப் பொறுத்தவரை இவை உழைத்து அலுத்துப் போனவர்களுக்கு இலக்கிய 'அல்வா' த்துண்டை அளிப்பதா

கச் சொல்லிக்கொண்டு வெளி வந்த போதிலும் உண்மையில் இந்த ரக சஞ்சிகைகள் தேசப் பற்றோ சமுதாயப்பிரக்ஞையோ அல்லது இலக்கியப் பிடிப்போ அற்ற, 'புளிச்சல் ஏவறைகாரர் களின்' மன உளைச்சல்களுக்கும் தனிப்பட்ட அவசங்களுக்கும் இரை அளிக்க எடுக்கப்படும் தரகர் வேலையைத்தான் இலக் கியத் துறையில் செய்கின்றன.

முன்னையது வரவேற்கத் தக்கதாகவும் பின்னையது நிரா கரிக்கத் தக்கதாகவும் இருக் கும். சமுதாயத்தின் தேவை கள் பல்கிப் பெருகிப் பன்முகப் பட்டு வருவதை நாம் பார்க் கிறோம். நமக்கு முன்னால் புதிய படித்த பரம்பரை உருவாகிக் கொண்டிருக்கிறது. எந்திர சாதனங்களைப் பயன்படுத்தும் புதிய ரக படித்த தொழிலாளி யும் படித்த விவசாயியும் தோன் றிக் கொண்டிருக்கிறார்கள். அர சியல், பொருளாதாரம், தொ ழில் நுட்பம், விஞ்ஞானம், விளையாட்டு, கலை, கலாசாரம் ஆகிய நானாவிதத் துறைகளில் புதிய புதிய தேவைகளை சமூக வளர்ச்சி முன்வைக்கிறது. இந் தத் தேவைகள் வளர்ச்சிகள் ஆகியவற்றைப் பிரதிபலிக்கவும் ஈடுசெய்யவும் கூடிய பலரக சஞ்சிகைகள் வெளிவரவேண் டிய காலம் பக்குவமடைந்து வருவதை அவதானிக்கிறோம். தனித் தனித் துறைகளுக்குத் தனித்தனிச் சஞ்சிகைகள்—இது சஞ்சிகை வளர்ச்சிக்கும் அறிவி யல் வளர்ச்சிக்கும் உதவுவது டன், சமுதாயப் பயனுள்ள தாக இருப்பதையும், ஒரே ரக சஞ்சிகைகள் வெளிவருவதில் முயற்சியும் பொருளும் விரைய மாவதையும் தடுக்கும். குறிப் பாகப் புதிய மாணவர் பரம் பரையின் தேவையைப் பிரதி பலிக்க பல சஞ்சிகைகள் வெளி வரக்கூடிய மெய்யான வாய்ப்பு கள் இன்றுள்ளன.

கே. இந்தியாவுக்கும் ஏனைய நாடுகளுக்கும் ஈழத்துச் சஞ்சிகைகளை ஏற்றுமதி செய் வதுபற்றிக் குறிப்பிட்டீர்களே, இதற்கு என்ன செய்யவிருக்கி றீர்கள்?

ப. ஈழத்து சஞ்சிகை வெளி யீட்டு முயற்சிகள் ஓரளவு ஸ்திரம் அடைந்ததும் 'பண்ட மாற்று முறை'யில் இந்திய சஞ் சிகைகளை இறக்குமதி செய்வது — ஈழத்து சஞ்சிகைகளை ஏற்று மதி செய்வது பற்றி ஓர் ஏற் பாட்டை இரு நாடுகளும் அர சாங்க மட்டத்தில் கொள்ள நாம் முனைப்புகளை மேற்கொள் வோம்.

கே. சஞ்சிகைகளை நடத்தாத வர்கள் சஞ்சிகையாளர் ஒன்றியத்தில் அங்கம் வகிப்ப தாகச் சிலர் கூறும் புகார்பற்றி என்ன கூறுகிறீர்கள்?

ப. இந்த உணர்வு சில சஞ்சி கையாளர்கள் மத்தியில் இருப்பதை நான் அறிவேன். ஒரு கோணத்தில் இருந்து மட் டும் அணுகும்போது இதில் ஒருவித நியாயம் இல்லாமலு மில்லை. இந்த உணர்வை நாம் முழுமையாக மதிக்கிறோம்.

ஆனால் ஈழத்து சஞ்சிகைக ளின் வளர்ச்சிக்குப் பாதகமான காரணிகளை அகற்றுமாறு கோரி இந்த நாட்டின் எழுத்தாளர் கள், குறிப்பாக முற்போக்கு எழுத்தாளர்கள், கடும் தூற்று தல்களுக்கும் பழிப்புகளுக்கும் மத்தியில் போராடியபோது ஒதுங்கியிருந்தவர்கள் அல்லது எதிர் முகாமில் இருந்தவர்கள்,

இன்று போராட்டம் வெற்றியடைந்ததும் அதில் கூதல் காயவும் பிடுங்கியது ஆதாயம் என்ற ரீதியில் முதலெடுக்கவும் முனைவதுடன், போராட்டம் நடத்தியவர்களிடமே 'நீங்கள் யார்?' எனக்கேட்கும் அளவுக்கு கொச்சைத்தனத்தின் எல்லைக் கோட்டை அடைந்திருப்பது தான் விசித்திரமாக உள்ளது.

இந்தப் போராட்டத்தை நடத்தியவர்கள் பெரும்பாலும் எழுத்தாளர்கள், அதுவும் முற்போக்கணியைச் சேர்ந்த எழுத்தாளர்களே. தமிழகத்தின் வர்த்தக மயப்படுத்தப்பட்ட சஞ்சிகைகளின் 'இலக்கிய' ஆக்கிரமிப்பிலிருந்தும் இதன் பாதகமான தாக்கத்திலிருந்தும் ஈழத்து இலக்கியத்தின் மீட்சியை ஏற்படுத்தவும், ஈழத்து இலக்கிய தனித்துவத்தை நிலைப்படுத்தவும், ஈழத்து தேசிய தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்கு ஆரோக்கியமான சூழலை உருவாக்கவும்தான் இவர்கள் போராடினார்கள். இந்தப் போராட்டம் அதன் வெற்றியில் ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்குள் பிரவேசித்துள்ள இன்று, இந்த வளர்ச்சியை திசை அமைப்பதிலும் முன்நடத்திச் செல்வதிலும் இந்த எழுத்தாளர்கள் தொடர்ந்து தமது பங்கைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர். இது இவர்களின் மீறமுடியாத தார்மீகக் கடமையாகும்.

இந்தப் பிரக்ஞை இவர்களுக்கிருந்த காரணத்தினால்தான் இவர்கள் அங்கம்வகித்த தமிழ் ஆலோசனைச் சபை கூட்டிய சஞ்சிகையாளர் மாநாடு இவர்களை ஒன்றியத்தின் சில பொறுப்புக்களுக்கும் தேர்ந்தெடுத்த போது இவற்றை இவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

இந்தப் பொறுப்புக்களை குழுமியிருந்த சஞ்சிகையாளர்களே அளித்தார்கள் என்பது இங்கு கவனத்திற் கொள்ளத் தக்கவையாகும். ஈழத்து இலக்கியம் சமுதாயப் பிரக்ஞையோடு வளரும் நிகழ்வை விரும்பாத, சொந்தத் தவிப்புகளை தரம் கெட்ட 'இலக்கியங்களாக்கி' அதில் சுயதிருப்திகாண விழைபவர்கள்தான் இந்தக் கூக்குரலை எழுப்புகின்றனர்.

சஞ்சிகைகளுக்கும் எழுத்தாளர்களுக்கும் இடையிலான உறவை யாராலும், எந்தச் சக்தியாலும் துண்டிக்க முடியாது. சஞ்சிகைகளின் வளர்ச்சியும் வெற்றியும் அதில் எழுதும் எழுத்தாளர்களையே பெரிதும் பொறுத்துள்ளது. என்றாலும் சஞ்சிகையாளர் ஒன்றியம் வளர்ந்து நிலைபாடு பெற்றதும், எழுத்தாளர் உறவு பேணப்படும் அதே வேளையில் இதன் பொறுப்புகளை சஞ்சிகையாளர்களே பெரும்பாலும் ஏற்கவேண்டும் என நான் நம்புகிறேன்.

கே. 'தரமான சஞ்சிகைகள்' பற்றி முற்போக்கு இலக்கிய கர்த்தாக்கள் முன்வைக்கும் கருத்துருவத்தைக் கேட்டதும் சிலர் குய்யோ முறையோ என்று அலறுகிறார்களே இதுபற்றி....?

ப. தரம் என்ற பதம் சஞ்சிகைகளுக்கு மட்டுமல்ல, அனைத்துத் துறைகளிலும் முன்வைக்கப்படுகிறது. அத்துடன் இது முற்போக்காளர்களால் மட்டுமல்ல பல கருத்து நிலை உள்ளவர்களாலும் முன்வைக்கப்படுகிறது. மக்களின் சுகாதாரத் தரம்பற்றி மருத்துவவியலாளர்களும், கல்வித் தரம்பற்றி கல்வியியலாளர்களும், பொருளாதாரத் தரம்பற்றி பொருளியலாளர்களும், கலாசாரத்

தரம்பற்றி கலாசார ஊழியர்களும் பேசுவதைப் போலவே, தரமான இலக்கியம் தரமான சஞ்சிகைபற்றி எழுத்தாளர்களும் சஞ்சிகையாளர்களும் பேசுகிறார்கள்.

தரக்குறைவான இலக்கியம் அல்லது சஞ்சிகைக்காகத் தாம் நிற்பதாக 'இந்துநேசன்' பாணியினர் கூடத் துணிந்து கூறுமளவுக்கு உணர்ச்சி மரத்துப்போய் சூடு சொரணையற்றவர்களாக இருக்க முடியாது.

மாறாக கனகதியான உள்ளடக்கம், காத்திரமான இலக்கியக் கோட்பாடு, பக்குவமான சமூகப் பார்வை, ஆரோக்கியமான இலக்கியப்பற்று, தேசாபிமானமிக்க உணர்வு ஆகியன குறித்து நபுஞ்சகமானவர்கள் தான் தரமான இலக்கியம் அல்லது தரமான சஞ்சிகை என்றதும் தலையிலும் மார்பிலும் அடித்துக்கொள்கிறார்கள். இவர்களைப் பற்றியோ, இவர்களின் சோதையான அல்லது சோரம்போன 'இலக்கியத்' தத்துவங்கள் பற்றியோ நாம் கவலைப்படத் தேவையில்லை. ஏனெனில் காலவெள்ளத்தின் முன் பாய்ச்சலுடன் சமுதாயத்தின் முன் போதலுடன் இந்தப் புல்லுருவித் தத்துவங்கள் பூண்டற்றுப்போகும்.

தேசப்பற்றும், மக்கள்பால் அபிமானமும், சமுதாய விமோசனத்தில் பற்றுறுதியும் கொண்ட தரமான இலக்கியப் படைப்புகளும், தரமான சஞ்சிகைகளுமே நிலைத்து வாழும். எதிர்கால சமுதாயம், நம் கண் முன்னே ஜனித்துக்கொண்டிருக்கும் சமுதாயம், அறிவுபூர்வமானதும், சமூக முன்னேற்றத்திற்குத் துணை நிற்பதுமான கருத்துக்களுக்கும் அவற்றின் கலை இலக்கிய வெளிப்பாடுகளுக்குமே உரியது.

கே. ஈழத்துச் சஞ்சிகைகளின் இலட்சியங்களும் நோக்கங்களும் எவ்வாறு அமைய வேண்டும் என்று கோடிகாட்டுவீர்களா?

ப. சஞ்சிகைகளின் இலட்சியங்களும் நோக்கங்களும் ஈழத்துத் தேசிய இலக்கியத்தின் இலட்சியங்களிலிருந்தும் நோக்கங்களிலிருந்தும் பிரிக்கப்பட முடியாதவை. அதேபோல ஈழத்துத் தேசிய இலக்கியத்தினது இலட்சியங்களும் நோக்கங்களும் ஈழத்துச் சமுதாயத்தின் இலட்சியங்களிலிருந்தும் நோக்கங்களிலிருந்தும் பிரிக்கப்பட முடியாதவை.

பொருளாதார சுதந்திரத்தை ஈட்டி நாட்டின் அரசியல் சுதந்திரத்தைப் பூரணப்படுத்துவது, சுயாதீனமான தேசியப் பொருளாதாரத்தை உருவாக்குவது, ஜனநாயக சமுதாய மாற்றத்தை ஏற்படுத்துவது, தேசிய செல்வங்களை அனைவருக்கும் பயன்படச் செய்யும் வகையில் ஓரே நீதியான சமூக அமைப்பைச் சிருஷ்டிப்பது சமூக வளர்ச்சியையும் அதன் ஜீவாதாரமான உற்பத்திச் சாதனங்களினதும் உறவுகளினதும் வளர்ச்சியையும் துரிதப்படுத்துவது, ஒரு புதிய கலை, கலாசாரத்தைப் படைப்பது ஆகிய பணிகளை உள்ளடக்கிய ஓர் ஐக்கிய ஈழத்தையும் சோஸலிஷ ஜனநாயகத்தையும் உருவாக்குவதே ஈழத்துச் சமுதாயத்தின் முன்னுள்ள கடமைகள். இலக்கியத்தின் முன்னும் சஞ்சிகைகளின் முன்னுமுள்ள இலட்சியங்களும் நோக்கங்களும் இவையே. இவற்றை இலக்கியமும் சஞ்சிகைகளும் தமது நானாவிதமான வெளிப்பாடுகள் மூலம் நிறைவேற்ற வேண்டும். ★

# ஒரு நதியின் ↕ புகலிடம்

சி. சுதந்திரராஜா

'பிஸ்மில்லாஹ் ஈர் ரெஹீம்' கதீஜா கற்கத்தொடங்கியதன் மானஸீக தரிசனத்தை அடுக்களையினுள் இருந்த பாத்திமாவிற்கு அது தருவதாயிற்று. ஜும்மா பள்ளிவாசலிலிருந்து எழுந்த அதிகாலைப் பாங்கு அவளைப் பக்திப்பிரக்ஞையில் முகிழ்த்தியது.

முழு மழையிலும் பாதிப் பனியிலும் நனைந்து நைந்து போன தேங்காய்த் தும்புகள் முரண்பட்டுச் சிணுங்கி எரிந்த சலனத்தில் சட்டியினில் இட்ட ஆப்பம் காய்ந்து கருகிச் சுருளுவதை அவளால் அனுமானித்திட முடியவில்லை. அவளுடைய கவனம் எல்லாம் எங்கேயோ ஆகர்ஷிக்கப்படுவதாயிற்று. சூன்யத்தைக் கக்கி நின்றிருந்த அவளது விழிகளின் பின்னணியில் சலனப்படமாய் நிகழ்வலைகள் ஓடியபோதும் பாங்கு முழக்கம் நின்ற பின்னரே சிந்தனையில் இம்மானுவேல் சுடர் விடலானன். பீச்சிய செங்குருதி தெருவின் தாருடன் பிணித்து மகாவலியாய்த் தோற்றந்தர இம்மானுவேல் அம்பகமுவ வீதியுடன் அத்துவிதமாய்ச் சயனித்துச் செத்துக்கிடந்த அந்த விபத்தின் விவரணை அவளிடம் பிரமாணம் பெறுவதாயிற்று.

இலவத் துறையினுள்ளே இம்மானுவேலைப் போன்ற ஒரு அதி விநோதமான, ஆனால் இஸ்லாத்தினால் ஈர்க்கப்பட்டோனை பாத்திமாவின் மனம் தேடித் தோற்றது. யாழ்க்குடாவின் குருநகரிலிருந்து பிறந்து, இலவத்துறையினுள்ளே குடியேறிய எட்டு வயதின் இம்மானுவேல் எப்படி இருந்திருப்பான் என்றறிய அவள் மனம் செம்மறியாய் அலைந்தது.

'நான் கரையான். வேதக்காறன். என்றை ஐயா சைவம். எண்டாலும் ஆச்சியை முடிச்சாப்பிறகு அவருக்கு அந்தோனியார்தான் எல்லாம்'

மூட்டை தள்ளும் வண்டிலை அந்தப் பாலகப் பிராயத்திலே ஸலெல்ஃபிக்கார் ஹாஜியாரிடமிருந்து வாடகைக்குப் பெறத் தொடங்கியபோது சொல்லியிருந்தானும். 'யா அல்லாஹ்! மதந்தழுவுவதில் அவன் தந்தைக்கும் தந்தையோ!' எந்த விதஇக்கட்டான லொறிஃபிரெய்ற்ஸ் நின்றிருப்பினும் வெள்ளிக்கிழமை பதினொன்றரைக்கு அட்டபாகை நோக்கி ஓடும் வீதியின் பாலஒர வளைவில் இறங்கி மாவலியில் தோய்ந்து சாரத்தோடும் தொப்பியோடும் கைக்குட்டையோடும் அவன் ஜும்மா தொழுகைக்குப் போய் வந்த வீறு இன்று அவள் கண்களையே மாவலியாக்க முனைந்தது. அவளாவது ஸஹிருவில்

எட்டாவது வரை படித்தபோது சூரத்துக்களை துறைபோக உய்த்து உணர்ந்திருக்கிருள். ஆனுல் எந்த விதமான படிப்பு வாசனையும் இல்லாத இம்மானு வேலோ முழுமையான அல்குர் ஆனின் விளக்கமாக அல்லவோ விளங்கினுன். வாழ்க்கையின் எந்தவித நுட்பத்திற்கும் சர்ச் சைக்கும் அவனுல் அல்குர் ஆனின் விளக்கங்களை எத்தனை நுட்பமாய்க் கொட்டித்தர முடிந்தது.

அவன் படித்த முதலும் முடிவுமான ஒரேயொரு நூல் அல்குர் ஆனே என்பதில் அவ னுக்கு ஒரு பெருமை. அதனை அவனுக்குப் படித்துக் தந்தவள் அவளே என்பதில் அவளுக்கு ஒரு பெருமை. வறுமையின் கொடுமைகளுக்கிடையிலும் வாழ்க்கை நடத்திய அவனுல் அவளுக்குக் கொடுத்த துன்பம் துஞ்சிய துன்பமே. அவர்களு டைய சங்கமம், கதீஜாவின் ஜனனம்.

ஈதுல்ஃபிதர் பெருநாளன்று ரஊபு வீட்டின் இளஞ் சிவப்பு இஸபெல்லாவில் கதீஜா கீறிய வாப்பாவின் விம்பத்திற்காக ரஊபு சாச்சா உதைந்த உதைப் பில் கதீஜா வீழ்ந்த விழுக்காட் டில் கல்லினுல் புருவத்தில் குழந்தை கொண்ட வடு அவள் நெஞ்சின் வடுவாய் எத்தனை காலம் வாட்டுவதாயிருந்தது! இம்மானுவேல்மௌத்தானபின் பாத்திமாவால் பட்டினி கிடந் திடல் வழக்காறுடமையாயிருந் தது. ஆனுல் கதீஜா என்ன பாவம் செய்தாள்? ஏன் அவ ளுக்குப் பட்டினி ஓர்விதி? பாத் திமா நிலாவ்தீன் கடைக்குச் சுட்டுக் கொடுத்திடும் ஆப்பங் களின் வருவாய் மாவின் செல விற்கே போதாத தாற்பரியத் தில் கதீஜாவின் போஷாக்குக் குறையுமே என்பதை கூட்டுற வுக் கடையில் சோமாவதி எத் தனை குத்தலாகச் சொல்லியி ருந்தாள்.

'கனகாட்டு நோவே. அபி ஆபஹூ பிட்டி கன்ன நா. சுமான தெக்கட்ட மேக்க அதி வெனவா' நசுக்காக பாத்திமா அவளிடமிருந்து சமாளித்தாள்.

சோமாவதிக்கு என்ன குறைச்சல். புருஷன் லியனகே கம்பனி ஸ்ரேசனுக்கு சிக்னல் மன். பிள்ளைகளும் இல்லை. போதாத குறைக்கு வாடகை யீட்டும் இரண்டு கடைகள். சோமாவதி சொன்ன இன்னேர் விஷயந்தான் அவளைக் குடைந்து குடைந்து ஊடுருவி ஊடறுத் தது. நிலாவ்தீன் மறுமணம் செய்வதிலே என்ன தப்பு என்று அதே ஊடுருவல் வினுவுமிட் டது. உலகினையே உய்விக்க அவதரித்த முகம்மதுநபி (ஸல்) தன் வாழ்விலேயே பத்துத் தடவை விதவை மணம்புரிந்து புகட்டிய வாழ்க்கைப் போதம் அவளது ஊடுருவலின் கேள் வியை வேள்வித்தீயாக்கி நிய திப்படுத்துவதாயிற்று. அவளு டைய இதிகாச அறிவுக்கு அதனை விடுத்த ஆன்மீகத் தத் துவார்த்த சான்ருதாரம் வலைப் படவில்லை. அலரி மலரால் பாதம் நிரப்பிய, கூட்டுறவுக் கடையோர முடிவில் நின்றிருந்த ஆலமர நிழலின் கௌதமரா சோமாவதியாய்ச் சொல்கின் ருர்? பாத்திமாவின் மனதில் நினைவின் குமிழிகள்.

'உம்மா, உம்மா! கமறூன் கிட்டேயீக்கிற பூச்சட்டை மாதரி'

பாத்திமாவின் இயலாமை பொருளுடமைச் சமூகக் கோப்

பில் சிறை கொண்டு ஈடேற முனைப்புப் பெற்றது. கொழு கொம்புகள் தான் இயலாமை களை ஒழிக்குமாயின் நிலாவ் தீனைச் சுற்றிப் படர நிர்பப்ந்திக் கப்பட்ட ஒரு கொடி என்னும் விதி நானே? நிலாவ்தீன் கந்தூரியிலிருந்து கொணர்ந்த வட்டிலப்பத்தை கதீஜா தின்றதுபாதி தின்னாதது பாதியாக அவள் ஏன் சிதறடிக்க வேண்டும்-கதீஜாவை ஏன் மொத்தினாள்? அவளிடம் புலனாகாத புதிர்.

புறநிலையில் நிலாமை ஏற்றும் அகநிலையில் புறக்கணித்தும் இருதலைக் கொள்ளியாய்ச் செப்படி செய்கிறாளா?

'இம்மானுவேல் இருந்த இதயமடி இது'—இந்தத் தகவலே நரம்புகளை வெகுவாகப் பாதித்தது. ரம்ஸான் நோன்பின் கடைக்கட்டத்தில் இம்மானுவேல் ஒருதடவை தத்துவ ஞானியாகக் கூறினான்: 'பட்டினியின் போது தான் அல்லாஹ்வின் கொடைகளைத் தெரிய வருகின்றது. பாலைவனத்தின் வரட்சியால்தான் சோலையைப் பற்றி உணர முடிகிறது. பொய்மை வரட்சியில் தான் உண்மையின் வனப்புகள் எல்லாலே தெரிய வருகின்றது'

பாத்திமாவின் சிந்தனைகள் அசைவுபட்டன. வெறும் பிறப்பாலே முஸ்லிம் அல்லாத இம்மானுவேலின் இஸ்லாமியத் தார்மீகத்தைப் பரம்பரை பரம்பரையாக பள்ளிவாசல் தர்மகர்த்தர் குடும்பமான நிலாமால் கைக்கொண்டு ஒழுக முடியாத பெற்றிமை அவளைப் பொறியிலகப்பட்ட புழுவாக்கிற்று. தனக்கோர் வழித்துணையைத் தானே தேடுவதில் வியப்பு அவளுக்கில்லை. அவள் தேடியதோ வெறும் ஜீவப் பிண்டமல்ல, இஸ்லாமியமே. எழுதப்பெற்ற மறைகளில் தேடுகின்ற தார்மீகத்தை மனிதனுள் தேடுவது அவளுக்கு விந்தையானதாகப் படவில்லை. மதத்திற்குப் புறம்பானது என்கிற சர்ச்சையும் அவளிடம் சுழியிடவில்லை, தன்னுள் அல்லாஹ் இருப்பதாக அவள் முழுக்க முழுக்க நம்பினாள்.

இருக்கின்ற அல்லாஹ்வை அவளுள்ளே உருவாக்கியவன் இம்மானுவேல். நிலாம், தீபத்தினால் விளக்குகளை ஏற்றுவானா சேரிகளைத் தீக்கிரை ஆக்குவானா? அதுவே அவளின்சர்ச்சை. அவளை அவளாள் மனமாற்றம் செய்ய முடியும் என்பதில் அவளுக்கு ஈடுபாடில்லை.

பூச்சுக் கழன்ற சுவரிலிருந்த செங்கட்டிகள் கைகொட்டிச் சிரிப்பதைப் போன்ற பிரமைப் பாடு அவளிடம் உருவானது. பிரமைகளைக் கோட்பாடு ஆக்குவதிலே அவளிடம் சம்மதம் கிடையாது. இம்மானுவேலின் கோட்பாடு எல்லாமே ஒன்று சேர்ந்து அவள் உள்ளத்தே ஒளிர்ந்து பிரமைகளைத் தவிடு பொடி செய்திட முனைந்தன. முனைப்பின் முடிபு நிலாவ்தீன்!

தோற்றத்தால் இம்மானுவேலை வெற்றியீட்டும் சுபாவம். இரு முனைத் தராசிலே அவளின் இதயத் துடிப்பான அச்சாணி திக்குமுக்காடியது,

கதீஜா வகாப்போடும் ஜமாலியாவோடும் விளையாடப் போயிருந்தாள். மூக்கு முட்ட விடப்பட்ட சாராய நெடி முன்னால் வர, அவளைத் தேடிப் பின்னால் வந்தான் நிலாம்.

'மக்காள் யாவெரும் ஒன்றே குலமென்னும் மார்க்கம் வந்தது யாராலே?' பக்திக்கீதம் பைலாவென அவனை ஆட்டி வைத்தது. நடையில் தள்ளாட்டம். கண்ணில் சுழலாட்டம். நெஞ்சில் கனலாட்டம்.

'ம். கதீஜா யெங்கே?'

'யேன்'

'அவகூட விளையாடனும், அத சுட்டி. என்னோட மவள் எல்லே.'

இம்மாம் நிதர்சனம்!

சிலிர்த்துக் குளிர்ந்தது அவள் மனம். போதையில் மிதந்த அவனது வார்த்தை அவளையும் போதையார்ந்ததிலே தான் மிதக்க வைத்தது. அந்த மிதப்பு வேகத்தில் நிலாவ்தீன் இம்மானுவேலினுள் ஒருங்கிணைந்து போனான். தள்ளு வண்டில் உந்திய உந்துதலோடு செத்து விட்டவன் மீண்டும் பிறந்து வந்தவனாயினான். அவள் தேடியதெல்லாம் இம்மானுவேலே. ஆனால் இம்மானுவேல் எல்லாம் அல்லாஹ்வின் ஒளிர் வேறு நிலாவ்தீன் அவளுக்குப் பொய்மைகளின் வக்காலத்துப் பிரதிநிதியே. கொடுமைகளின் ஒட்டு மொத்தமே. இம்மானுவேல் நிலாவ்தீனில் சங்கமித்ததும் ஒளி இருளை விழுங்கி ஏப்பமிடுவது போலான மிகையுணர்வில் அவள் மிதந்தாள். அவளுள் தன்னை மறந்து தலைவன் தாள் தலைப்பட்டவள், குதர்க்கம் மறைந்து தர்க்கம் மிளிர்வது போலாயின. மயக்கத்தை எதிர்த்த அறமதை; மறம் என்றே கருதி வந்த உண்மையின் அறத்தை அகிலமெங்கும் ஏகோபித்து அங்கீகரித்ததும் அறக் கர்த்தா அடைகின்ற இறும்பூது. கடலோடு கலப்பதற்காகவே காதாதி தூரம் ஓடி வந்து கலக்கின்ற மாவலிகங்கை கொண்டிடுகின்ற களிபேருவகை. சம்பிரதாயச் சடங்குகள் அம் மகோன்னதத்தின் முன்னால் வெறுமையார்ந்த அர்த்தமற்றவைகளாயின.

வெளியுலகிற்கு — பாத்திமாவிற்குப் புதுப் புருஷன் கிடைத்திருக்கிறான்' ★




உண்மை இலக்கிய ரசிகர்களுக்கு சில பொறுப்பான கடமைகள் உண்டு. ஈழத்து தேசிய இலக்கியம் தனக்குகந்த தகுந்த கௌரவத்தைப் பெற வேண்டும். இதைச் சாதனையாக்க முனைந்து செயலாற்றி வெற்றி பெறும் நோக்கத்துடனேயே மல்லிகை ஆரம்பிக்கப்பட்டது. இதைச்சாதிக்க விருப்பமுள்ளவர்கள் தொடர்ந்து மல்லிகையைப் படிக்கவும்.

ஆண்டுச்சந்தா 7-00
தனிப்பிரதி 50 ச.

# மலையக இலக்கியக் கடிதம்

நாவல்நகர். பி. மகாலிங்கம்

மலையகத்தில் தோன்றியுள்ள மறுமலர்ச்சி இயக்கங்களை வேரோடு பிடுங்கி எறிந்துவிடும் பணியில் சில சந்தர்ப்பவாதிகளும் அவ்வப்போது பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டுவிட்டுத் திருப்தியடைந்துவரும் சிலரும் நடந்துவருகின்றனர். விசயமில்லாமல் அவ்வப்போது பிரபல்யமாகும் இவர்களின் 'ஸ்டன்ட்' வேலைகள் மலையக முற்போக்கு இளைஞர்களிடையே பழக்கப்பட்டுவிட்டதொரு 'புளித்த' சங்கதியாகும். என்ன இருந்தாலும் முற்போக்கு எண்ணங்களுக்கு தடையாக இருப்பவர்கள் நாட்டு வளர்ச்சியில் மாத்திரமின்றி நம்மவர்களின் வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டை போட்டு என்ன சுகத்தைத்தான் அநுபவிக்கப் போகின்றார்களோ. அது அவர்களுக்குத்தான் வெளிச்சம்.

ஹட்டன் பகுதி இளைஞர்களிடையே புதியதொரு ஊக்கத்தைக் காணக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு முன்னோடியாக விளங்குபவர் ஹட்டன் ஹைலட்ஸ் கல்லூரி அதிபர் திரு. திருச்செந்தூரன் அவர்கள்தான். 'கல்கி' நடாத்திய சிறுகதைப் போட்டியில் பரிசுபெற்றவரான இவர் எழுத்துத்துறையில் சற்று ஓய்வு எடுத்துக்கொண்ட போதிலும் வருங்கால இலக்கிய அபிமானிகளையும், இலக்கிய கர்த்தாக்களையும் உருவாக்குவதில் இவரது பணி திசைதிரும்பியுள்ளது வரவேற்கத்தக்கதாகும்.

மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் கும்பகர்ணப் பாணியில் செயல்பட்டு வருவதையடுத்து மலையக நகரங்கள் முழுவதிலும் ஆங்காங்கே புதிய இலக்கிய வட்டங்கள் உருவாகியுள்ளது இளைஞர்களிடையே இலக்கிய ஆர்வம் வளர்ந்துள்ளமைக்குச் சான்று பகர்வனவாகும். 'மலைக் குருவி' சஞ்சிகையாளர்கள் நடாத்திய சிறுகதைப் போட்டியில் ஏராளமானவர்கள் பங்கு பற்றியுள்ளனர். லண்டனில் இருந்து வெளியாகும் 'லண்டன் முரசு' பத்திரிகை நடாத்திய சிறுகதைப் போட்டியில் நாவலப்பிட்டி இளைஞருக்கு இரண்டாவது பரிசு கிடைத்துள்ளது. கம்பளைப் பகுதி இளைஞர்கள் பலர் சேர்ந்து இலக்கியக்குழுவொன்றினை அமைத்துள்ளனர்.

நாவலப்பிட்டி இளம் எழுத்தாளர் சங்கம் நடாத்திய 'ஈழத்து இலக்கியம்' பற்றிய கருத்தரங்கில் நமது வாசகர்கள் இன்னும் சினிமாப் பாணியிலான சஞ்சிகைகளையே ஆதரிப்பவர்களாக இருக்கிறார்கள். இதுதவிர இப்பகுதியிலுள்ள தமிழ் அபிமானிகள் அறிந்து கொள்ளும் பொருட்டு சங்கத்தின் செலவிலேயே ஈழத்து சஞ்சிகைகளை பாடசாலைகட்கும், படிப்பகங்களுக்கும் விநியோகிப்பதென்றுதீர்மானிக்கப்பட்டது.

சாகித்திய வாரத்தையொட்டி மலையகம் முழுவதிலும் சாகித்திய விழாவைக் கொண்டாட அனைவரும் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர். ★

# செம்மறி ஆடு

'நீள்கரை நம்பி'

குளிரைத் தடுத்து
வெம்மையைப் பெற்றெடுப்பது
கம்பளிப் புடவை.
நோயில் உழலும்
மனிதரை எல்லாம்
பேணிக்காத்துச் சுகத்தை அளிப்பது
அந்தப் போர்வை;
இத்தனை சேவைகள்
செய்யும் கர்த்தா
செம்மறி ஆடு—
தகிக்கும் தணலில்
ஊதைக் காற்றில்
புலம்பி அழுவதை
யாரறிவார்?
சேவைக் கேற்ற
ஊதியம் 'இல்லை'
கிடைக்கும் சுகத்தில்
சௌக்கியம் 'இல்லை'
அருகிருக்கும் தொழில் நிலையத்தின்
உழைப்போர்
கண்களில்
காட்சி படர்ந்தது
ஆமாம்.........
சேவைக்கேற்ற
ஊதியம் இல்லை
சுகமும் கிடைக்க
வழியும் 'இல்லை'
பேணிக் காத்துச் சுகத்தை
அளிப்பது
அந்தப் போர்வை.

## இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம்

## கட்டுபெத்தை வளாகம் அளித்த

# மகத்தான கலைவிழா

நெல்லை. க. பேரன்

ஈழத்தின் கலை, இலக்கிய கர்த்தாக்கள், சுவைஞர்கள், மாணவர்கள் அனைவரும் மனம் மகிழும் வகையில் கட்டுப் பெத்தை வளாகத்துத் தமிழ் மாணவர்களின் கலைவிழா கடந்த 3-9-72 ஞாயிற்றுக்கிழமை பம்ப லப்பிட்டி சரஸ்வதி மண்டபத் தில் காலை, மாலை ஆகிய இரு வேளைகளிலும் மிக விமரிசையாக நடைபெற்றது. காலை 9 மணிக்கு பெரும் பொருளாளர் திரு. க. நடேசலீங்கம் மங்கள விளக் கேற்றி ஆரம்பித்துவைத்தார். செல்வி செ. ஜெயலட்சுமி தமிழ் வாழ்த்திசைக்கத் துணைத் தலை வர் திரு. நா. நித்தியானந்தன் வரவேற்புரை நிகழ்த்தினார். இதைத்தொடர்ந்து, 'நான் விரும்பும் மாறுதல்கள்' என்ற தலைப்பில் இளைஞர்கள் கருத்து துரைகள் வழங்கினர்.

பத்திரிகைத்துறையில் தான் விரும்பும் மாறுதல்கள் பற்றி திரு. இ. முத்துரத்தினானந்தன் கருத்துத் தெரிவிக்கையில் ஈழத் தின் தேசியப் பத்திரிகைகள் எழுத்தாளர்களுக்குக் கூடிய சுதந்திரத்தைக் கொடுத்து அவர் களது உண்மையான உணர்ச்சி களுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்றும் ஆபாசச் செய்திகளுக்கு முக்கியத்துவமளிக்கக் கூடாது என்றும் தெரிவித்தார். சிறுகதை நாவல் பற்றி திரு. வேந்தனார் இளங்கோ பேசுகையில்; 'யதார்த்தம் என்பது சிறுகதை. நாவல்களில் சுமார் 25 சதவீ தந்தான் தொனிக்க வேண்டும். உண்மையான அனுபவங்களை எழுதுவதன் மூலம் வாசகர்க ளைக் கவர்ந்துவிட முடியாது. சாதாரண வாசகர்களையும் சிறு கதைப் பிரியர்களாக மாற்ற வேண்டும்' என்ற பொருள்படப் பேசினார். உண்மையான கலை, இலக்கியத்தின் தேவை என்ன என்பதுபற்றிய பூரண பிரக்ஞை இன்றியே இவரது இத்தகைய கருத்துக்கள் உதிர்ந்தன என லாம். இலங்கைப் பல்கலைக்கழ கக் கொழும்பு வளாகத்தைச் சேர்ந்த திரு. பொன். சத்திய நாதன் 'திரைப்படத் துறையில் தான் விரும்பும் மாறுதல்கள்' என்பது பற்றிக் கருத்துத் தெரி விக்கையில், 'தமிழகத் திரைப் படங்கள் யதார்த்த வாழ்வினைச் சித்திரிப்பதில்லை. கதாநாயகர் கள் பிச்சைக்காரப் பாத்திரத் திலும் கோட்டும் சூட்டும் போட் டுப் பாட்டுப்பாடி ஆடுவார்கள். திறமையான நடிகர்களுக்கு இடமளிக்காமல் நடிகர்கள் தேர் வில் தனி ஆளுமை இடம்பெறு கின்றது. ஈழத்தைப் பொறுத்த வரையிலும் திரைப்பட வளர்ச்

சிக்கு என்று சொல்லிக்கொண்டு ஏற்படுத்தப்பட்ட திரைப்படக் கூட்டுத்தாபனம் உண்மையில் தனிப்பட்ட ஒரு மொழிப்படத்தைத் தடைசெய்வதற்காக ஏற்படுத்தப்பட்டதுதான் என்றால் அது எமக்குத் தேவையில்லை' என்றார். இதைத் தொடர்ந்து இலங்கை சட்டக்கல்லூரியைச் சேர்ந்த திரு. பெரி. சுந்தரலிங்கம் 'நாடகத்துறையில் தான் விரும்பும் மாறுதல்கள்' என்பது பற்றிப் பேசுகையில், தமிழ் இளைஞர்களுக்கு நாடகம் வழங்குவதற்கு வாய்ப்பும் வசதியும் குறைவாக இருக்கின்றன. புதிய உத்திகள் என்று சொல்லிவிட்டுச் சினிமாவில் உள்ளவற்றை மேடையில் கொண்டுவந்து காட்டக்கூடாது. நாட்டு நிலைமைகளையும் மக்களின் தேவைகளையும் மாறுதல்களுக்கான சிந்தனைகளையும் நாடகங்கள் பிரதிபலிக்க வேண்டும். கலைஞர்கள் கூட்டுறவாக ஒன்றுசேர்ந்து நாடகங்களை நடாத்த வேண்டும்' என்றார். இவரது கருத்துக்களில் உண்மையும் ஆழமும் பொதிந்து காணப்பட்டன. இன்று கொழும்பில் மேடைக்கு வரும் நாடகங்கள் எத்தகையவை என்பதையும் இனிமேல் எத்தகைய நாடகங்கள் வரவேற்கப்படல் வேண்டும் என்பதையும் இவரது கருத்துக்கள் பிரதிபலித்தன. இதையடுத்துக் கலைப்பொருட்களில் தாம் விரும்பும் மாறுதல்கள் என்பது பற்றி திரு. க. கு. சிவகுமார் பேசுகையில் செம்பு, மீன்பறி முதலிய பொருட்களில் கலைத் தன்மைகளைப் பற்றி விரிவாக வியந்து பேசினார். தமது ஆசிரியரான வெள்ளையர் ஒருவருக்குத் தான் யாழ்ப்பாணத்திலிருந்து வாங்கிக் கொடுத்த மீன்பறியைப் பற்றி அவர் மிகவும் புகழ்ந்துமகிழ்ந்ததாகவும் மேடையில் இவர் தெரிவித்தார். தமிழர்களுடைய கலைப்பொருட்களின் பெருமைகளைக் குன்றாமல் பாதுகாத்தல் வேண்டும் என்ற கோரிக்கையையும் இவர் விடுத்தார். ஒரு புதிய பொருளை மிக இலகுவாகவும் சிறப்பாகவும் இவர் பேசிமுடித்தமை பாராட்டுக்குரியதே. இதைத் தொடர்ந்து சங்க உறுப்பினர்கள் சார்பில் திரு. பொ. மாணிக்கவாசகர் தொகுப்புரை நிகழ்த்துகையில், 'புதிய சமுதாயம் தோன்றுவதற்குப் பழைய மரபுகள் உடைக்கப்படல் வேண்டும். யதார்த்த இலக்கியங்களை எழுதுகிறவர்கள் தமது வார்த்தைப் பிரயோகங்களை ஒரு அளவாகவும் கட்டுப்பாடாகவும் பாவிக்க வேண்டும், என்றார்.

இதைத் தொடர்ந்து கொழும்பு கலை, இலக்கிய நண்பர் கழகத்தின் சார்பில் திரு. இமையவன் கருத்துத் தெரிவிக்கையில், 'யாழ்ப்பாணத்தில் இன்னும் நிலமானிய அமைப்பு இருந்து வருகிறது. ஒரு பெண்ணை அவளது விருப்பமில்லாமலேயே இன்னொரு ஆடவனுக்குக் கட்டிவைப்பதுதான் கற்பு என்று கருதப்படுகிறது. (இச்சந்தர்ப்பத்தில் இமையவன் 'காணிக்கை' என்ற நூலின் முகவுரையின் சில பகுதிகளை வாசித்துக் காட்டினார்) கல்வியமைப்பும் சமுதாய மாறுதலைச் செய்யும் ஒரு முக்கிய கருவியாக இருக்கின்றது. ஆதலினால் கல்வியமைப்பில் நாம் கூடிய கவனம் செலுத்தல் வேண்டும்' என்றார். இறுதியாக மேற்படி இளைஞர்கள் கருத்தரங்கிற்குத் தலைமை வகித்த திரு. எஸ். பொன்னுத்துரை பேசுகையில், '1960 முதல் இன்றுவரை இந்த நாட்டின் இலக்கிய வளர்ச்சிக்காக கோஷங்கள் முன்வைக்கப்பட்

டன. வெறும் கோஷம்போடுகிறவர்கள் எல்லாம் இதுவரையில் தமது படைப்புக்களாக எத்தனை புத்தகங்களை வெளியிட்டிருக்கிறார்கள்? இந்த நாட்டில் பத்திரிகையாளனுக்கு முதலில் முதுகெலும்பு தேவை. அடுத்ததாக மூளை தேவை. மூன்றாவதாக பேனா தேவை. ஏனென்றால் இன்று பல பத்திரிகையாளர்கள் கத்தரிக்கோலையும் பிளேட்டையும் வைத்துப் பிறமொழி விஷயங்களை வெட்டி மொழிபெயர்த்தே தமது காலத்தை ஓட்டிவிடுகிறார்கள். இந்த நாட்டில் யாரும் அரசியல் பேசக்கூடாது. கருத்துக்களை யார் சொன்னார்கள் என்று பார்க்கிறார்களே தவிர என்ன கருத்தை எப்படிச் சொன்னார்கள் என்று யாரும் பார்ப்பதில்லை. இந்த நாட்டின் கலை, இலக்கியங்களைக் கட்டி வளர்க்கிறோம் என்று கங்கணங் கட்டி நிற்கும் எழுத்தாளர்கள் இந்த விஷயங்களை மனங்கொள்வார்களாக' என்றார். இவருக்கே இயல்பான நகைச்சுவைகளும் கிண்டல்களும் தளித்தன்மைகளும் கொண்டதாக இத்தொகுப்புரை அமைந்தது. அடுத்த நிகழ்ச்சியாகக் கவியரங்கம் இடம்பெற்றது.

'புதியதோர் ஒளியை நோக்கி...' என்ற தலைப்பிலான இக்கவியரங்கத்திற்கு கவிஞர் அம்பி தலைமைவகித்தார். ஆரம்பத்தில் மறைந்த மதுரகவி இ. நாகராஜனுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலியைச் செலுத்திவிட்டுக் கவியரங்கத்தை திரு. அம்பி ஆரம்பித்து வைத்தார். இவர் தமது ஆரம்பவுரையாக இன்றைய ஈழத்தின் பல்வேறுபட்ட மனிதர்களின் போக்குகளையும் குறிப்பாக அரசியல் ஏமாற்றுக்காரர்களையும் வன்மையாகச் சாடினார். சரியான சமதர்ம சமுதாயம் உதயமாக வேண்டும் என்றும் பாடினார். மிகவும் உற்சாகமாக நடைபெற்ற இவ்வரங்கில் கவிஞர்கள் க. இராஜமனோகரன். கு. புனிதன், வே. இளங்கோ, எம். ஏ. நுஃமான், மாவை தி. நித்தியானந்தன், குப்பிழான் ஐ. சண்முகம் ஆகியோர் கலந்துகொண்டனர். நுஃமான், நித்தியானந்தன், சண்முகம் ஆகியோரின் கவிதைகளில் அவர்தம் உண்மையான உணர்ச்சியும் வளர்ச்சியும் தென்பட்டன. குறிப்பாக மாவை நித்தியானந்தன் கட்டுபெத்தையில் விடுதியில் இருக்கும் யாழ்ப்பாணத்து மாணவன் ஒருவனுக்கும் அவனது தகப்பனுக்குமிடையே நடைபெற்ற கடிதத் தொடர்புகளைக் கவிதை வடிவில் மிக நகைச்சுவையாகவும் அதேசமயம் கருத்தாழமுடனும் பாடியமை என்னை மிகவும் கவர்ந்தது என்பேன். சாதித் தடிப்பும் மூடக்கொள்கைகளும் தனிநலன்கள் பேணும் பாங்குகளும் கொண்ட யாழ்ப்பாணத்து மாணவர்கள் இன்றும் இருக்கிறார்கள் என்பதையும் இவர்கள் எல்லாம் புதியதோர் ஒளியை நோக்கி, மாற்றத்துக்கான வழிகளில் செல்ல முன்வரல் வேண்டும் என்பதையும் இக்கலைவிழாவில் எடுத்துச் சொன்னமை பொருத்தமான சந்தர்ப்பமே எனலாம். வேந்தனாரின் புதல்வர் திரு. இளங்கோவின் கவிதைகளிலும் தரப்படுத்தல் பிரச்சனை, சாதிப்பிரச்சனை முதலியன அடிபட்டன. மொத்தத்தில் கவிஞர்கள் அனைவரும் சமூக மாறுதல்களை முழுமனதுடன் வரவேற்கின்றார்கள் என்ற பொதுமையான கருத்தினையே மனங்கொள்ளத்தக்கதாக இருந்தது. இது இளைய சந்ததியின

ரின் வளர்ச்சிக்கும் நல்ல அறிகுறியே எனலாம்,

அடுத்து 'தமிழ் சினிமாவின் தரமும் போக்கும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கம் கலாநிதி கா. சிவத்தம்பி தலைமையில் நடைபெற்றது. திரு. கே. எஸ். சிவகுமாரன், திரு. சி. மௌனகுரு ஆகியோர் தாம் ஏற்கனவே தயாரித்து வந்திருந்த கட்டுரைகளைப் படித்தனர். திரு. சிவத்தம்பி முகவுரையாகச் சொல்லுகையில், 'எந்த ஒரு கலைவடிவமும் அதில் சம்பந்தப்பட்ட எல்லா மக்களுக்கும் பொதுவான ஒரு வடிவமாக அமைகிறதோ அது தான் நாட்டு மக்கள் அனைவரையும் திரட்டுகின்ற கலைவடிவமாகும். இந்த வகையில் சினிமா தான் முதலிடத்தை வகிக்கின்றது. தென்னிந்தியச் சினிமா வடநாட்டுச் சினிமாவை விட அதிகம் வேறுபட்டதில்லை. வியாபார நோக்குடனும் ரசிகர்களைத் திருப்திப் படுத்துவதற்காகவும் மக்களுடைய அதீதமான கற்பனைகளுக்கு உருவம் கொடுக்கும் வகையிலும் தமிழ்ச் சினிமாக்கள் தயாரிக்கப் படுகின்றன. என்னைப் பொறுத்தவரையில் விமர்சன ரீதியாக ஆங்கிலப் படத்தை ஒரு தடவைதான் பார்க்கமுடிகிறது. ஆனல் தமிழ்ச் சினிமாவைத் தேவையையொட்டி இரண்டு மூன்று தடவைகளும் சலிக்காமல் பார்க்க முடிகிறது. அதற்காக அவை தரமானவை என்ற முடிவுக்கு நான் வரவில்லை. தமிழ்நாட்டில் தி. மு. க. ஆட்சிக்கு வந்தமைக்கு முக்கிய காரணம் நாடகம், சினிமா சம்பந்தப்பட்ட பிரச்சாரந்தான். நாடகம் தாய் என்றும் சினிமா சேய் என்றும் சொல்லுகின்ற மரபு இன்னும் இருந்து வருகின்றது' என்றார். மேலும் இவர் பேசுகையில் தமது கருத்துக்கள் மேற்படிவிஷயத்தை ஆராய்வதற்கு ஒரு தோற்றுவாயாக அமையுமே தவிர முழுமையாகப் பார்ப்பதாகக் கருதமுடியாது என்றார். அடுத்து திரு. கே. எஸ். சிவகுமாரன் பேசுகையில், 'தரத்தை நிர்ணயிப்பவர்கள் யார்? தரத்தை எவ்விடம் எடைபோடுகிறார்கள்? தரமான படங்கள் ஐரோப்பாக் கண்டத்தில் இருந்துதான் வெளிவருகின்றன முதலாளித்துவ நாட்டுப் படங்கள் செல்வந்தர்களின் மன விகாரங்களைச் சித்தரிக்கின்றன. சமதர்ம நாட்டுப் படங்களைத் தான் உண்மையான யதார்த்த வாழ்வினைச் சித்தரித்து மக்களின் பிரச்சனைகளையும் தேவைகளையும் உணர்த்துகின்றன. ஐரோப்பியச் சினிமாக்களுடன் ஒப்பு நோக்குகையில் தமிழ்ச் சினிமா மிகவும் பின்தங்கியுள்ளது. தமிழ்ச் சினிமா தொழில் நுட்ப ரீதியாக முன்னேறிக் கலைத்தரத்தில் பின்தங்கியுள்ளது. இலக்கியத்துறையில் காணப்படும் வேகமும் வளர்ச்சியும் சினிமாத் துறையில் காணப்படவில்லை. சில பொதுத் தன்மைகளுடன் பார்ப்பதானல் தமிழில் ஜெயகாந்தன், ஸ்ரீதர், கே. எஸ். கோபாலகிருஷ்ணன் ஆகியோரின் முயற்சிகளைப் பற்றிக் குறிப்பிடலாம்' என்றார். பிரபலமான பிறமொழிப் படங்கள் சிலவற்றை உதாரணங்கள் காட்டி இவர் தமக்கே இயல்பான கருத்தாழமுடன் உரைநிகழ்த்தினர். அடுத்து திரு. சி. மௌனகுரு பேசுகையில், 'தரமான எழுத்தாளர்களுடைய கதைகள் படமாக்கப் படுவதில்லை என்று குறைப்பட்டார். மேலும் இதுவரை படமான கதைகளும் முழுக்க முழுக்க வெற்றியளிக்கவில்லை என்றும் பல புராணப்

படங்களில் நடிகர்களுக்கேற்பக் கதையம்சங்களும் காட்சிகளும் மாற்றியமைக்கப்பட்டுப் பெரும் மோசடியே நடைபெற்றுள்ளது என்றும் தெரிவித்தார். இது வரை மெளியான அகிலன், மு. வ. அண்ணுதுரை, கல்கி போன்ற பல எழுத்தாளர்களின் திரைப்படங்களின் பட்டியல் ஒன்றையும் இவர் கொடுத்தார். இன்றைய தமிழ்ப் படங்களில் காணப்படும் பொதுவான குறை பாடுகளையும் அவற்றைக் களைவ தற்கான ஆலோசனைகளையும் இவரது கருத்துக்களில் காண முடிந்தது. காலை நிகழ்ச்சிகளுக்கு துணைச் செயலாளர் திரு. பொ. மாணிக்கவாசகர் நன்றியுரை கூறினர்.

மாலையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள்தான் விழாவை மேலும் மெருகூட்டின எனலாம். மண்டபம் நிரம்பிவழிந்த மக்கள் கூட்டத்துடன் சரியாக பி. ப. 5 மணிக்கு விழா தியாகராசா, தவம் குழுவினரின் நாதஸ்வரத் துடன் ஆரம்பமானது. சங்கத் தலைவர் திரு. இ. சிவபாலன் தலைமைவகித்தார். பிரதம விருந் தினராக வருகைதந்த திரு. எல். எச். சுமனதாசா பேசுகை யில், 'தமிழ் மாணவர்கள் தொழில்நுட்பத் துறையில் சிறந்து விளங்குவது போலவே கலைத்துறையிலும் கலாசாரத் துறையிலும் சிறந்து விளங்குவ தைக் காணப் பெருமையாக இருக்கிறது என்று குறிப்பிட் டார். மேலும் பொறியியல் படிக்கும் மாணவர்கள் சமூகத் தில் மனிதர்களோடு உறவாடக் கூடிய சமூக அறிவையும் அனு பவத்தையும் பெறுவதற்கு இத் தகைய விழாக்கள் உதவுகின்றன என்றும் சொன்ன இவர் பல்க லைக்கழக கட்டுப்பெத்தை வளா கத் தமிழ் மாணவர்களின் முயற் சியைப் பெரிதும் விதந்துரைத் தார். 'அறிவு வசனத்தின் அவ சியம்' என்ற தலைப்பில் கவிஞர் இ. முருகையன் சொற்பொழிவு நிகழ்த்தினர். 'வளாகம்' என்ற புதிய தமிழ்ச் சொல்லின் பாவ னையைப் பற்றிக் குறிப்பிட்ட இவர் வெறும் இலக்கிய வளர்ச்சி மாத்திரம் போதாது. புதுப் புதுக் கலைச்சொற்களும் விஞ் ஞானத்தோடு இயைந்த நவீன வசன அமைப்புகளும் அறிமுகப் படுத்தப்படல்வேண்டும் என்ருர். தாம் சமீபத்தில் எழுதிய 'மாம துரமும் தேமதுரமும்' என்ற கட்டுரைத் தொடரின் ஒரு தொடருரையாகவே இப்பேச் சினை இவர் நிகழ்த்தினுர் என்பது குறிப்பிடத்தக்கது. விஞ்ஞானக் கல்வியும் பல்கலைக்கழகங்களில் தமிழ்மூலம் போதிக்கப்பட்டால் மேற்படி அறிவு வசனத்தின் வளர்ச்சி மேலும் விரிவடையும் என்றும் குறிப்பிட்டார். வழமை போலவே இவரது பேச்சில் சொற்சிக்கனமும் கருத்தாழமும் காணப்பட்டன. ஒரு பயனுள்ள பேச்சு எனலாம். இதைத்தொ டர்ந்து பிரபல சிங்கள எழுத் தாளரும் சாகித்திய அக்கடாமி யில் உறுப்பினருமான திரு. குண சேன விதான 'நவீன சிங்கள இலக்கியமும் தேசீய ஒற்றுமை யும்' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினர். இவரைப்பற்றி அறிமுகம்செய்த மன்றத்தலைவர் உண்மையிலேயே தமிழ் மக்களின் நியாயமான உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ளக் கூடிய ஒரு சகோதர சிங்கள எழுத்தாளர் என்று வர்ணித்தார். மேலும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத் தின் முக்கிய அங்கமான வெள்ள வத்தைத் தமிழர்கள் மத்தியில் திரு. குணசேன விதான போன் றவர்களை அறிமுகஞ் செய்வதி

லும் பிரயோசனமிருக்கிறது என்ற கருத்தையும் இவர் வலியுறுத்தினர்.

திரு. குணசேன விதான பேசுகையில், 'ஜனவரி 71-ல் யாழ்ப்பாண நகரசபையில் தமிழ் எழுத்தாளர்களுடன் கலந்து கொண்டபிறகு இன்று இக்கூட்டத்தில் கலந்துகொள்கின்றேன். தமிழ், சிங்கள வகுப்புவாதிகளுக்கு எதிரான போராட்டத்தை நடத்துகின்ற இயக்கம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்றே நான் காலங்காலமாகக் கூறியிருக்கின்றேன். எங்களுக்குள் ஒற்றுமை இருக்கவேண்டும். எமது சிங்கள வகுப்புவாதிகள் செய்த அநீதிகளை நான் ஒப்புக்கொள்ளாமல் இருக்கமுடியவில்லை. யாழ்ப்பாணத்தில் பிறக்கும் குழந்தைக்கும் மாத்தறையில் பிறக்கும் குழந்தைக்கும் உடம்பில் ஓடுகின்ற இரத்தம் ஒன்றுதான். தமிழ், சிங்கள எழுத்தாளர்கள் இந்தநாட்டின் தேசிய ஒற்றுமைக்காகவும் பொருளாதார வளர்ச்சிக்காகவும் தமது கலை, இலக்கியங்களைப் படைத்தல் வேண்டும்' என்பன போன்ற பல முற்போக்குக் கருத்துக்களை முன்வைத்து மிகவும் உணர்ச்சிவசமாகப் பேசினர். இவரது ஒவ்வொரு கருத்துக்களுக்கும் சபையிலிருந்து பலத்த கரகோஷங்களுடன் வரவேற்பு இருந்ததை அவதானிக்க முடிந்தது. வெகு விரைவில் கொழும்பு நகரசபை மண்டபத்தில் தமிழ் சிங்கள எழுத்தாளர்களை ஒன்று திரட்டி இத்தேசத்தின் இன ஒற்றுமைக்கான சாசனம் ஒன்றைக் கையெழுத்திடுவோம் என்றும் பத்துத் தரமான தமிழ் எழுத்தாளர்களின் கதைகளைச் சிங்களத்தில் மொழிபெயர்க்கும் பணியில் ஈடுபடுவோம் என்றும் இவர் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சில அசம்பாவிதங்களைத் தென்னிலங்கைப் பத்திரிகைகள் பெரிதாகப்படம் பிடித்துக் காட்டியமையாலும் பொலிசார் அனுமதி வழங்க மறுத்தமையாலுமே கடந்த யூலையில் மாத்தறையில் நடைபெறவிருந்த தமிழ் எழுத்தாளர்களுககான வரவேற்புக் கூட்டம் நடைபெறமுடியவில்லை என்ற கருத்தையும் இவர் தெரிவித்தார். இந்த நாட்டின் பெரும்பான்மை இனத்தைப்பற்றித் தமிழ் மக்கள் அவநம்பிக்கை கொண்டுள்ள இக்காலகட்டத்தில் எழுத்தாளருடைய இத்தகைய கருத்துக்கள் மிகவும் மகிழ்ச்சியையும் பயனையும் தரத்தக்கதான வகையில் இருந்தன என்றுல் இது மிகையாகாது. உண்மையான தேசீய எழுச்சியும் இன ஒற்றுமைக்கான சகோதரத்துவ பாவமும் தொனிக்கும் பண்பாளரான திரு. குணசேன விதான தமது அடக்கமான பேச்சின் மூலம் சரஸ்வதி மண்டபத்தில் கூடிய தமிழர் நெஞ்சங்களில் எல்லாம் நிறைந்து நின்ருர் என்பேன். இவரது பேச்சினை திரு. சிவா சுப்பிரமணியம் மிகவும் அழகாக மொழிபெயர்த்தார். இதைத் தொடர்ந்து 'சாவின் சதி' என்ற தாகூரின் கதையைத் தழுவிய நாடகமும் மாவை. தி. நித்தியானந்தன் கதை வசனம் எழுதிய 'இனிச் சரிவராது' என்ற சமூக நாடகமும் நடைபெற்றன. இந்த இரண்டு நாடகங்களிலும் முழுக்க முழுக்கக் கட்டுபெத்தை மாணவர்களே பங்கு கொண்டனர். எம். ஏ. குலசீலநாதனின் இன்னிசைக் கச்சேரியும் மாணவர்களின் 'அம்பிகாவதி அமராவதி' என்ற நகைச்சுவை கதாகாலட்சேபமும் நடைபெற்றன.

★

சபா. ஜெயராசா

# சிறுகதைகளும் தொழிற்பாகுபாடும்

இலக்கியங்களுக்கும் தொழிற்பாட்டிற்கும் நேரான இணைப்பிருப்பதைக் காணலாம். கதைக் கரு, கதாபாத்திரங்கள் மொழிநடை, முதலியன, தொழிற்பாகுபாடுகளின் அடிப்படையில் அமைந்து வருவது நுணுகி அவதானிக்கத்தக்கது. இலக்கியத்திற்கும், சமூகத்திற்குமிடையிலுள்ள தொடர்பினை நோக்குகையில் இத்தகைய இணைப்பு தவிர்க்கமுடியாததாகின்றது.

கைத்தொழில் புரட்சிதந்த இலக்கியக் குழந்தை சிறுகதையாகும். தொழிற்சாலைகளினதும், நகரங்களினதும் தோற்றத்தினுல், கிராமியக் கூட்டு வாழ்க்கை சிதறத் தொடங்கியது. சமூகத்தில் ஏற்பட்ட மிக முக்கியமான இந்நிகழ்ச்சி, இலக்கியத்திலே புதியதொரு வடிவமொன்றைத் தோற்றுவிக்கக் காரணமாக இருந்தது.

புதிய கண்டுபிடிப்புக்களும், யந்திரங்களின் உபயோகங்களும், நகரங்களின் தோற்றமும், கல்வி வளர்ச்சியும், சிக்கலான சமூகவமைப்பினை உருவாக்கியது. இதற்கு முந்திய மானிய சமூகவமைப்பு சிக்கலற்ற எளிமையான சமூகவமைப்பாகும். இச் சமூகவமைப்பில் மரபினை ஒட்டிய சிறிய தொழில்களே வளர்ச்சியடைந்திருந்தன. கைத்தொழிற் புரட்சியினுல் தொழிற்பாகுபாடுகளும், தொழிற் சிறப்பியல்புகளும், வளர்ச்சிபெறத் தொடங்கின. ஒரு தொழில் இன்னெரு தொழிலில் நம்பியிருக்க வேண்டிய சங்கிலித் தொடர்பான இணைப்பும், சிக்கலான தன்மைகளும் வளர்ச்சிபெறத் தொடங்கின.

புதிய இலக்கிய வடிவமான சிறுகதைகள் இத்தொழிற் பாகுபாடுகளையொட்டி எழுந்துள்ளமை அவதானிக்கத் தக்கது. ஒவ்வொரு தொழில் புரிவோருக்கும் அவரவர்க்குரிய தனிப் பிரச்சினைகள் உள. தொழில்களுக்கிடையில் வருமான ஏற்றத்தாழ்வு காரணமாக சமூக அந்தஸ்தும் வேறுபடுகின்றது. இதன் விளைவாக சமூக உறவுகள் வழிப்படத் தொடங்குகின்றன. இவற்றை வெளிப்படுத்தக் சிறுகதை தக்கதோர் இலக்கியவாகனமாகின்றது.

குறித்த ஒரு தொழில் புரிவோனைச் சிறுகதைப் பாத்திரமாக அமைக்கும்பொழுது பிரதேசவழக்கிற்குரிய மொழிநடை மட்டும் பாத்திரத்தை முழுமையாக்கிவிடமாட்டாது. அவனது தொழிலோடு சம்பந்தப்பட்ட சொற்கள், சொற்றொடர்கள், உவமைகள், குறியீடுகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

உதாரணமாக யாழ்ப்பாணத்திற்குரிய ஒரு பொதுவான பிரதேச வழக்கிருந்தாலும், இங்குள்ள சுருட்டுத் தொழிலாளி, மோட்டார் வாகனம் பழுதுபார்க்கும் தொழிலாளி, கட்டடவேலை செய்யும் தொழிலாளி, எழுதுவினைஞர், விவசாயி ஆகியோரது பேச்சுமொழியிலும், முறையிலும், உவமைகளிலும் அவரவர் தொழில்களின் செல்வாக்கு ஊறி நிற்பதைக் காணலாம். அவரவர் கையாளும் சாதனங்கள், எதிர்நோக்கும் பிரச்சினைகள், ஆகியன வேறுபடும்பொழுது, அவற்றிற்குரிய மொழிப்பாங்கும் வேறுபடுகின்றது.

நிலப்பிரபுத்துவ சமூகத்திலே தொழிலின் அடிப்படையிலே சாதி வகுக்கப்பட்டது. குறித்த ஒரு சமூகத்தைச் சேர்ந்தவன் தனது சந்ததிக்குரிய தொழிலையேசெய்ய நேரிட்டது. கைத்தொழிற் புரட்சியும், கல்வியும், இத்தகைய தொழில் முறைக் கட்டுக்கோப்பினை முறியடித்து சிதறச் செய்துவிட்டது. ஆனால் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் மானிய முறைச் சமூகவமைப்பு முற்றாக ஒழிந்துவிடவில்லை. இதனால் ஒரு சாதிக்குரிய தொழிலைச் செய்தவர் இன்னொரு சாதிக்குரிய தொழிலைச் செய்யும்பொழுது நிலப்பிரபுத்துவ மரபின் ஒட்டுண்ணிகள் எதிர்ப்புச் சக்திகளாகின்றன. சமீபத்தில் வெளிவந்த தெணியானின் சிறுகதை 'கரையை நோக்கி' — மல்லிகை 8-வது ஆண்டுமலர்-இதை நன்கு ஓவியப்படுத்துகின்றது.

தொழில்களுக்கிடையே பாகுபாடிருந்தாலும், பல்வேறு தொழில்களைப் புரிவோரும் பொதுவான தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர். சிறுகதையைவிட நாவல் பரந்த கலையுருவமாக இருப்பதனால், பல்வேறுபட்ட தொழில் புரிவோரினது வாழ்க்கையையும், பொதுவான தாக்கங்களையும் உள்ளடக்கும் தன்மை வாய்ந்தது. இதுவே சிறுகதைக்கும், நாவலுக்குமுரிய வேறுபாட்டினை ஏற்படுத்துகின்றதெனவும் கூறலாம். ★

நாற்சந்தி

ஆலயத் திருந்தொரு
அடியவன் வந்தான்
'சேர்ச்'சிலிருந்தொரு
கிறிஸ்தவன் வந்தான்
மசூதி விட்டொரு
முஸ்லிம் வந்தான்
விகாரத் திருந்தொரு
புத்தனும் வந்தான்.
நாலு தெருக்களால்
நால்வரும் வந்தனர்.
நடுவில் சந்தியில்
நின்றனர் கூட்டாய்
ஆலை யொன்றினை
நோக்கி அனைவரும்
வேலை செய்ய
நடந்தனர் ஒன்றாய்!

— சிவம் கோப்பாய்

கலீலியோ
காலத்தில்
வாழ்ந்த



# இயோஹானஸ் கெப்ளர்

ஜி. டி. ஆர்-ல் பத்துப்படிவ பாலி டெக்னிக் பள்ளிப் படிப்பின் கடைசியாண்டில் மாணவர்கள் வானியல் எனும் புதிய பாடம் கற்கத் தொடங்குகின்றனர். ஏற்கெனவே படித்தறிந்த கணக்கியல் நில இயல் பௌதீக இயல் போன்ற துறைகளில் கிடைத்த அறிவை ஆதாரமாகக் கொண்டு இந்த வானியலின் பல துறைகளிலே ஆட்சி செலுத்தும் பல விதிகளையும் ஆதார உண்மைகளையும் கற்கின்றனர். இன்றையக் குழந்தைகள் செயற்கைக் கோள்களும் விண்வெளிக் கப்பல்களும் பறக்கும் காலத்தில் பிறந்தவர்களல்லவா!

இந்தப் பாடங்களிலே இயோஹானஸ் கெப்ளர் பேர் பலமாக அடிபடும் — அந்த மாமனிதரின் 400-வது பிறந்த நாள் விழா அடுத்த ஜனவரி மாதம் வருகிறது. வூர்டம்பர்க் அருகே வைல் எனும் ஊரில் கெப்ளர் பிறந்தார். நெருக்கடியும் சோதனையும் மிகுந்த காலத்தில் வளர்ந்தார். ஜெர்மன் முதலாளி வர்க்கப் புரட்சியை 1525-ல் தோற்கடித்து விவசாயிகளின் போரை நசுக்கி முடித்து வெற்றிபெற்ற அரசர்கள் நாட்டைப் பிளவுபடுத்தினர். அந்தந்த அரசனின் கொள்கைக்கு உகந்த முறையிலே அந்தந்தப் பகுதி கத்தோலிக்கச் சார்புடனே புராடெஸ்டண்ட் சார்புடனோ மாறி மாறிக் காட்சியளித்தன. 1589-ல் கெப்ளர் டுபிங்கன் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். புராடெஸ்டண்ட் இறையியல், கணக்கியல், வானியல் பாடங்கள் படித்தார். அவரது ஆசிரியர் மைகேல் மேய்ஸ்ட்லின் அவருக்கு கொபர்னிகஸ் தத்துவங்களைப் போதித்தார். கொபர்னிகஸ் ஒரு மாபெரும் போலந்து நாட்டு வானியலாளர். சூரியனைச் சுற்றித்தான் மண்ணுலகு சுழன்று வருகிறது என்னும் அவரது கருத்து பூமியைச் சுற்

றித்தான் சூரியன் சுழன்று வருகிறது எனினும் சமயக் கோட்பாடுகளின் கருத்துக்கு எதிராயிருந்தது.

1594-ல் கெப்ளர் கிராஸ் நகரில் கணக்கியல் பேராசிரியரானுர். கவிஞர் வெர்கில் பற்றியும் இலக்கியங்கள் பற்றியும் விரிவுரைகள் அளித்து வந்தார். அவரது ஆராய்ச்சியுழைப்பின் பயனுக 1596-ல் மாயப் பிரபஞ்ச இயல் எனும் நூல் வெளிவந்தது. இறையிலல் தத்துவங்களேயும் கணக்கியல் தத்துவங்களேயும் சாமர்த்தியத்துடன் இணைக்க முயன்ற முயற்சி அது. கோபர்னிகஸ் வர்ணித்த கோள்களின் விசித்திரமான சுற்றுப்பாதைகளே விளக்கக் காரணங்காட்ட முயன்ற முயற்சி அது.

பிராக் நகரில் இரண்டாவது ருடோல்ப் எனும் பேரரசரிடம் ஆஸ்தான கணக்கியலாசிரியராக சேவை செய்து வந்த டென்மார்க் நாட்டு வானியல் விஞ்ஞானி டைகோ பிராஹே என்பவர் கெப்ளரை தன்னுடன் வந்து பணியாற்ற அழைத்தார். ஏற்கெனவே இருவரும் கடிதப் போக்குவரத்து நடத்தி வந்தனர். ஆக, 1600-ம் ஆண்டில் (அதாவது மதக் கோட்பாடுகளே எதிர்த்ததற்காக கியார்டானே புருனே சிலுவைக் கம்பத்தில் எரிக்கப்பட்ட ஆண்டில்) கெப்ளர் பிராகுக்கு வந்தார். டெலஸ்கோப் கண்டுபிடிக்கப்பட முன்பே டைகோ பிராஹே பல வான் கோள்களேப்பற்றி நுட்பமான ஆய்வு விபரங்கள் திரட்டியிருந்தார். தனது முடிவுகளேத் துணையாகக் கொண்டு கெப்ளர் செவ்வாய் கோளின் சுழல் பாதையைக் கணக்கிட்டு ஆராயட்டும் என்று யோசனே கூறினுர். ஓராண்டுக்குப் பின் பிராஹே இறந்துபோனுர். அவர் இடத்தில் கெப்ளரை பேரரசர் நியமித்தார். சூரியன் ஒரே நிலேயில் இருந்து வர அதைச் சுற்றி மற்ற கோள்கள் நீள்வட்டப் பதைகளிலே சுழன்று வருகின்றன என்றும், எவ்வளவுக்கெவ்வளவு அவை சூரியனுக்கு அருகாமையிலுள்ளனவோ அவ்வளவுக்கவ்வளவு அவற்றின் சுழலும் வேகம் இருக்கிறது என்றும் தைரியமிக்க முடிவுக்கு வந்தார் அவர் — 'இதற்குப் பல ஆண்டுகள் கடினமாக உழைக்கவேண்டியிருந்தது' என்று கெப்ளர் எழுதியுள்ளார். 1609-ல் பிராகில் வெளியிடப்பட்ட 'அஸ்ரோணேமியா நோவா' எனும் தமது நூலில் அவரது பெயர் தாங்கிநிற்கும் இவ்விரண்டு மகத்தான விதிகளும் விளக்கப்பட்டன. கோள்களின் சுழற் காலங்கள் சராசரி தொலேவுகள் பற்றிய அவரது மூன்ருவது விதி 1619-ல் டி ஹர்மோனிஸ் மண்டி எனும் அவரது நூலில் வெளியிடப்பட்டது. இந்நூலும் பிராக் நகரில் பதிப்பானது.

ஹாலந்து நாட்டில் 1608ல் கண்டுபிடிக்கப்பட்ட டெலஸ்கோப் பயன்படுத்தப்படத் தொடங்கியதிலிருந்து கெப்ளர் மேலும் உற்சாகத்துடன் ஆராச்சிகளில் ஈடுபட்டார், 1611-ல் 'டயோப்ட்ரீஸ்' எனும் அவர் நூல் வெளிவந்தது. வானியல் டெலஸ்கோப்பை தலேகீழாக வைத்து ஆராயும் கருத்து முதன் முதலாக வெளியிடப்பட்டது.

பேரரசர் ருடோல்ப் இறந்தபின் கெப்ளர் லின்ஸ் நகரத்துக்குப் போனுர். வடக்கு ஆஸ்திரிய அரசுகளிலே கணக்கியல்

விஞ்ஞானியாக நியமிக்கப்பட்டார்.

பல வெற்றிகள் ஈட்டிய போதிலும் பிராகில் அவர் வாழ்க்கை இன்பமாகஓடவில்லை. மனைவியும் குழந்தைகளும் இறந்துவிட்டனர். பேரரசன் முறையாக அவருக்குச் சம்பளம் தரவில்லை.

*1618*-ல் முப்பதாண்டுப் போர் வெடித்தது. அது முடியு முன்பே கெப்ளர் இறந்துவிட்டார். *1620*-லும் *1621*-லும் அவர் சொந்த ஊருக்குப்போய் தமது வயது முதிர்ந்த தாயாருக்குத் துணையாக இருந்தார். மத வெறியர்கள் அவரது தாயாரைச் சூனியக்காரி என்று குற்றஞ்சாட்டி எரிக்கப் பார்த்தனர். கத்தோலிக்க துருப்புகள் லின்ஸ் நகரை வசப்படுத்திக்கொண்டபோது கெப்ளர் அங்கிருந்து வேளியேற வேண்டியதாயிற்று. கோள்களின் நிலைகள் முன்னைவிட சரி நுட்பமாகக் கணக்கிடுவதற்கான பட்டியல்களை அவர் *1627*-ல் தயாரித்து 'தாபுலே ருடொல்பினே' என்று பேரரசரின் நினைவாக பெயரிட்டார். *1628*-ல் வாலன்ஸ்டைன் மன்னனிடம் வேலைக்கமர்ந்தார். பேரரசனைத் தேர்ந்தெடுக்கும் மன்னர்களின் கூட்டம், ரிகென்ஸ்பர்க்கில் நடக்கையில் தமது சம்பள பாக்கியைக் கோரிப் பெறும் எண்ணத்துடன் கெப்ளர் அந்நகருக்குப் போக ஒரு ஆபத்தான பயணத்தை மேற்கொண்டார். மூன்று நாள் கழித்து அந்நகரிலேயே அவர் உயிர்நீத்தார்.

விண் வெளியாராய்ச்சியின் சாத்தியப் பாடுகளையும் கெப்ளர் கண்டித்தார். *1610*-ல் அவர் கலீலியோவுக்கு இவ்வாறு எழுதினார். 'சிறுசிறு கடல்களாகவும் விரிகுடாக்களாகவும் உள்ள ஒட்ரியாடிக், பால்டிக்- இங்கிலிஷ் கால்வாய் போன்ற கடல்களில் பயணம் செய்வதைவிட மகா சமுத்திரத்தில் பயணம் செய்வதில் அபாயம் குறைவு என்று யாராவது நினைத்திருக்க முடியுமா? வான்வெளிக் காற்றுகளைச் சமாளிக்கத்தக்க கப்பல்களைக் கட்ட முடிந்தால் அண்ட வெளியிலே பாய்ந்தேறவும் மனிதர்கள் முன்வருவார்கள் என்பது உறுதி. அதற்கு இடையே இப்படிப்பட்ட விண்வெளியாராச்சி வீரர்கள் வந்து சேருமுன் அண்ட வெளிக் கோள்களின் படங்களை வரைந்துகாட்ட நீங்கள் (கலீலியோ) சுக்கிரனையும் நான் சந்திரனையும் ஆராயலாம் வாருங்கள்!' ★

---


மல்லிகை

புதிய சந்தா விபரம்

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | 7-00 |
| தனிப்பிரதி | -50 |
| இந்தியா, மலேசியா | 10-00 |

# காலங்கள் அழுவதில்லை

சி. வீ. தம்பையா

தேயிலைத் தோட்டத்தில் கூலிவேலை செய்து தள்ளாமை காரணமாக முடங்கிக்கிடந்த மாயாண்டிக்கு இரு புதல்வர்கள். மூத்தவன் மாரிமுத்து; இளையவன் ராமு.

மாயாண்டி தனது மனைவி இறந்த பின்னர் அவளது நகைகளை தனது பிற்காலச் செலவுகளுக்குத் தேவைப்படும் என்று பாதுகாத்து வருகிறார். இதை அறிந்த மாரிமுத்து தனது மகளின் திருமணச் செலவுகளுக்காக அந்த நகைகளைத் தருமாறு தந்தையிடம் பெற்று விரைவில் திருப்பித் தருவதாகவும் சொல்லித் திருமணத்தை நடத்துகின்றான். பின் தகப்பன் தன்னுடன் வசிப்பது வீண் சுமை என்பதை உணர்ந்து வீட்டைவிட்டே விரட்டுகிறான்

இளைய மகனை ராமு வீட்டிற்குப் போன தந்தையை அவன் காப்பாற்றுகிறான். தாயின் நகைகளை மாயாண்டி மாரிமுத்துவுக்கு கொடுத்ததை அறிந்து தந்தையிடம் அன்பாக இருப்பதாகப் பாசாங்கு செய்து மாயாண்டியின் சேமலாபநிதிப் பணத்தை தந்திரமாகப் பெற்றுக் கொள்ளுகின்றான். மூத்தவனிடம் நகைகளையும், இளையவனிடம் பணத்தையும் இழந்த மாயாண்டி இருவராலும் புறக்கணிக்கப்பட்டு அனாதையாக மருத்துவ மனையில் இறக்கின்றான்.

இருவரும், தந்தை இறந்தபின் ஈமச்சடங்கை யார் நடத்துவது என்பதில் போட்டி போடுகிறார்கள்.

யாழ்ப்பாணத்துச் சூழலையும் கொழும்பு சூழ்நிலையையும் அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட நாடகங்களை அடிக்கடி பார்த்துச் சுவைத்த கொழும்பு நாடக ரசிகர்களுக்கு முழுக்க முழுக்க தோட்டத்துச் சூழலைவைத்து எழுதப்பட்ட இந்நாடகம் ஒரு மாற்றத்தையும் சுவையையும் தந்தது.

மாயாண்டியின் குணச் சித்திர பாத்திரத்தை ஏற்று தயாரிப்பாளரும் கதாசிரியருமான 'மாத்தளை கார்த்திகேசு' நடித்திருக்கிறார் என்று சொல்வதைவிட இப்பாத்திரமாகவே மாறிவிட்டார் என்றால் மிகையாகாது. மாரிமுத்துவாக நடித்த செல்லையா மிகைபடாமல் இயற்கையாக நடித்தார். பானுவும், ரோகினியும் குறைசொல்ல முடியாது நடித்தார்கள்.

ஆறு காட்சிகளில் ஒரு தோட்டத் தொழிலாளியின் வாழ்க்கையை எளிமையாகவும் இயற்கையாகவும் சித்தரித்த கதாசிரியர் இயக்குநர் இருவரும் எமது பாராட்டுக்குரியவர்கள். ★

# வெண் திரையில் ஓர் கறுப்பு மனிதர்

எஸ். ஸ்ரீரங்கன்

நீண்ட காலமாக மேற்கத்திய திரையுலகில் 'கறுப்பு இனத்தவர்' என்ற ஒரேயொரு காரணத்திற்காக அனுமதி மறுக்கப்யட்ட பல 'நீக்கிரோ' கலைஞர்கள் தமது நடிப்புத் திறனாலும், கலையார்வத்தாலும் இப்போது முன்னணிக்கு வந்துகொண்டிருக்கின்றனர். பணம் படைத்த படாதிபதிகளும், ஏகபோக அதிகாரம் கொண்ட இன வெறி மிகுந்த சில வெள்ளைக்கார இயக்குனர்களும் திறமை மிகுந்த நீக்கிரோ நடிகர்களை திரைக்கு வரவிடாது, ஒடுக்கிவந்தனர். ஆனால் அவர்களது நடிப்புத் திறனை இவர்களால் ஒடுக்கிவிட முடியவில்லை.

நீக்கிரோ மக்களின் கலாசாரத்தையும், பண்பாட்டையும் நடிப்புக்கலையில் அவர்கள் கொண்டிருந்த ஈடுபாட்டையும் இருளிலிருந்து வெளிச்சத்திற்குக் கொணர்ந்த நடிகர் சிட்னி பொய்ரர் என்பவரே. இவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி பல நீக்கிரோ நடிகர்கள் கொலிவூட் திரைவானில் இப்போது தாரகைகளாக பிரகாசிக்கத் தொடங்கியுள்ளனர்.

1927-ம் ஆண்டு 'புளோரிடா என்ற இடத்தில் பிறந்த சிட்னி பொய்ரர் தனது இருபத்திரண்டாவது வயதில்தான் நடிப்புத்துறையில் ஈடுபட்டுக் கொள்ளத் தொடங்கினர். ஏழை மக்களுக்கு இயற்கை வழங்கும் ஒரேயொரு சொத்தான வறுமைதான் சிட்னி பொய்ரர் குடும்பத்திற்கும் தனிச் சொத்தாகவிருந்தது. இல்லாமையைப் போக்குவதற்காக நியூயோர்க் வந்த இவர், உணவு விடுதியொன்றில் பரிசாரகன் பணியை மேற்கொண்டார். ஓய்வு நேரங்களில் நடிப்புக் கலை பற்றி இவர் சிந்திக்கத் தொடங்கினர். பத்திரிகைகளில் வந்த விளம்பரங்களைக் கண்ணுற்ற இவர் நடிகர் தேர்வுக்கு விண்ணப்பித்தார். பல தேர்வுகளில் 'கறுப்பு இனத்தவர்' என்ற ஒரேயொரு காரணத்திற்காக இவர் புறக்கணிக்கப்பட்டார். இறுதியாக ஒருவாறு 1949-ம் ஆண்டில் ஒருபடத்தில் மிகச் சிறிய பாத்திரமென்று இவருக்கு அளிக்கப்பட்டது. அதில் இவரது நடிப்புத்திறனைக் கண்டு முன்னேக்கிக் கால் வைத்த தயாரிப்பாளர்கள் இவரது 'கறுப்பு இனம்' காரணமாகப் பின்னேக்கி நகரத் தொடங்கினர். 1950-ம் ஆண்டில் இவர், உல

கப் புகழ்மெற்ற நடிகரான றிச்சாட் பேட்டனுடன் ஒரு படத்தில் பத்து நிமிடங்கள் மட்டும் நடிப்பதற்கு எம். ஜி. எம். நிறுவனத்தினரால் ஒப்பந்தம் செய்யப்பட்டார். ஆனால் அப் பத்து நிமிடங்களிலும் இவரது நடிப்பு கதாநாயகனான றிச்சாட் பேட்டனின் நடிப்பைவிடச் சிறப்பாக அமைந்ததால் தயாரிப்பாளர்கள் சர்வசாதாரணமாக அதை நறுக்கித் தள்ளிவிட்டனர்.

தான் ஏற்கும் பாத்திரத்தின் தன்மையை நன்குணர்ந்து பாவனைகள் சிந்தும் அங்க அசைவினாலும், உணர்ச்சிகள் மிளிரும் நடிப்பாலும் அப்பாத்திரமாகவே மாறிவிடுபவர்தான் சிட்னி பொய்ரர். 1959-ம் ஆண்டில் பேகி அன்ட் பெஸ் என்னும் படத்தில் இவருக்கு கதாநாயகனாக நடிக்கும் வாய்ப்புக் கிட்டியது. அன்றிலிருந்து பல படங்களில் இவர் கதாநாயகனாகவே நடிக்கத் தொடங்கினார். அவ்வப்போது நடிப்பதற்குச் சந்தர்ப்பங் கிடைத்த வாய்ப்புக்களை இவர் தன்னை உயர்த்திச் செல்லும் படிக்கற்களாகக் கருதிக்கொண்டார். இப்போதெல்லாம் இவர் நீக்கிரோ மக்களின் வாழ்வையும், அவர்தம் பாரம்பரியத்தையும் பரிணமிக்கும் படங்களில்தான் விரும்பி நடிக்கின்றார். விரல்விட்டு எண்ணக்கூடிய இவர் நடித்த படங்களில் சில மிகச்சிறந்தன என்று சர்வதேசச் சினிமா விமர்சகர்களால் புகழப்பட்டுள்ளன. இப்படங்களில் முறையே குருட்டுப்பெண்ணை வழிநடத்திச் செல்லும் வழிகாட்டியாகவும், துப்பறியும் நீக்கிரோ பொலிஸ் அதிகாரியாகவும், கல்வி கற்பிக்கும் ஆசிரியராகவும், வெள்ளைக்காரப்பெண்ணின் கறுப்பு இனத்துக் காதலனாகவும் வேடங்களேற்று இவர் நடித்துள்ளார். பல சிறப்பம்சங்களைத் தன்னுள் கொண்டுள்ள இந்த திரைப்படக் கலைஞரை 'நீக்கிரோ' என்ற ஒரு காரணத்துக்காகப் பல சஞ்சிகைகள், பத்திரிகைகளும் இன்றும் இருட்டடிப்புச் செய்து வருவது விசனிக்கத்தக்கது.

1967-ம் ஆண்டில் ஹொலிவூட்டில் நடைபெற்ற சிறந்த நடிகர் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பத்து நடிகர்களுள் சிட்னி பொய்ரரும் ஒருவரானார். 1968-ம் ஆண்டில் திரைப்பட ரசிகர் சங்கம் நடத்திய தேர்வில் சிறந்த நடிகர் என்ற விருது இவருக்கே கிடைத்தது.

இனவெறி காரணமாகப் பல நடிகர்களும், படத் தயாரிப்பாளர்களும் ஓர் இயக்கமாகச் சேர்ந்து நீக்கிரோக் கலைஞர்களை முளையிலேயே கிள்ளியெறியத் துடித்தனர். இவர்களுக்குப் பக்கபலமாக சினிமாச் சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் உதவின. இருந்தும் என்ன பயன்? நீக்கிரோக் கலைஞர்களிடமிருந்து சுரந்த நடிப்புத் திறனையும், கலையுணர்வையும் அவர்களால் கிள்ளியேறிய முடியவில்லை.


சென்றமாதம் ஹொலிவூட்டில் பக் அன்ட் பிறீச்சர் என்ற இப்படத்தின் நெறிப்படுத்தும் பொறுப்பு, இப்படத்தில் பிரதம பாத்திரமேற்று நடிக்கும் சிட்னி பொய்ரரிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உலக நீக்கிரோ மக்களைத் திரைப்படத்துறையில் பிரதிநிதித்துவப்படுத்தும் பாணியில் ஈடுபட்டுள்ளேன். எமக்கெனத் தனித்துவமாகவுள்ள பண்பாடுகளை நான் நடித்த படங்களில் பிரதிபலிக்கச் செய்துள்ளேன், என்று ஒருதடவை குறிப்பிட்டிருந்தார். ★

சிங்கள மூலம்;-
மார்ட்டின் விக்கிரமசிங்க

தமிழில்:-
தம்பிஜயா தேவதாஸ்

சிறுகதை



# இடிந்த வீடு

நாங்கள் ஹிக்கடுவையை தாண்டிக் கடற்கரையினூடாக நடக்க ஆரம்பித்தோம். கடற் காற்றைச் சுவாசித்தவாறு மூக்குத் துவாரங்களைச் சுருக்கிக் கொண்டே தொடர்ந்து சென்றோம், கடலினால் இரைமீட்கப் கட்ட சங்கு, சிப்பி, சோகி, பாசி, குப்பை ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்ட வெண் மணற்பரப்பு எங்களுக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணியது. நான் சிலவேளைகளில் சோகிகள் நிறைந்த குப்பைக் குவியலைக் கிளறினேன். அந்தச் சிப்பி யோட்டுக் குவியலில் சலவைக் கல்லைப் போல் மின்னும் சிப்பி யோடொன்றை ஆசையுடன் கையில் எடுத்துக் கொண்ட எனக்கு ஆச்சரியம் அதிகமாகியது. அது சிப்பியோட்டைப் போன்ற வெற்றுப்பொருளல்ல. மாணிக்கத்தைப் போன்ற பாரமான பொருள். வைரத்தைப் போன்று சூரியவொளியைக் கவரும் அந்தச் சலவைக்கல் சிப்பி யோடு இந்த உருவத்தைப் பெற்றது எவ்வாறு?

சிப்பியோட்டுக் குவியல்களை கிளறிக்கொண்டு நடந்துசென்ற நாங்கள் துர்நாற்றம் வீசியதால் இடைக்கிடை மூக்கைப் பொத்திக்கொண்டோம். சிறிய நகர சபையொன்றினுல் ஆளப்படும் இங்கு கடற்கரை மலகூடமான தற்கு மனிதர்கள் எதிர்ப்புத் தெரிவிக்காதது அவர்கள் அதற்குப் பழக்கப்பட்டவர்கள் என்பதினுலா? கடலினுல் ஏற்பட்ட அருவருப்பினைற்போன்று வீடுகளும் மலசல கூடங்களும் அதற்குப் பின்பக்கம் காட்டியிருந்தன.

கரையோரமாக நடந்து சென்ற நாங்கள் கற்பாறையொன்றின்மேல் ஏறிக்கொண்டோம். எங்களுக்கு அறிமுகமுள்ள தோணிக்காரர்களைப் போன்று எங்களை நோக்கிச் செலுத்தப்படும் இரண்டு பாய் கட்டிய தோணிகளைக் கண்டோம்.

'இரவில கடலுக்குப்போன தோணிகள்..... இந்தக் கற்பாறையிலிருந்து கால்மைலுக்கு

அங்கால இருக்கிற துறையில தான் வந்துசேரும்' என்று கூறி ஞன் நண்பன்.

'அப்படி எண்டா எங்களைக் கண்டுவிட்டு எங்களை நோக்கி வரும் தோணிகளல்ல!'

காய்ந்த பாசியால் மூடப் பட்ட கற்பாறையில் கற் பூ வொன்றைக் குனிந்து நோக்கிய என்னை, நண்பன் ஒருமாதிரியா கப் பார்த்தான்.

'கல்லைப் பார்த்து கடற் பூச்சைப் பிடிக்கவா?'

'இல்லை'

சிப்பி ஓடுகளால் சூழப் பட்ட கற்பொந்து ஒன்றைக் கண்ட என் நண்பன் மிகவும் ஆச்சரியம் அடைந்தான்.

'கற்பொந்தைச் சுற்றிச் சிப்பியோடுகள் எப்படிக் குவிந் தன?' நான் வினவினேன்.

'சிப்பியோடுகளிடம் கேட் டால் சொல்லும்'

'சிப்பியோடுகள் எப்ப டியோ தெரியா; சிப்பிகள் என் ருல் முற்காலத்தில் கதைத்தி ருக்கின்றன. அவை கதைத்த பாஷை தெரிந்த பண்டிதர்கள் என்ருல் இன்னும் இருக்கிருர் கள்.........'

'முற்காலத்தில சிற்பிகள் கதைத்தன என்று யார் சொன் னவை?'

'பண்டிதர்கள்'

'நீ என்னைக் கேலி செய்கி ருய்' என்றவாறே நண்பன் என்னை நோக்கினுன்.

'இந்தச் சிப்பியோட்டின் பின்னணியிலிருக்கும் கதையை நான் சொல்லுகிறேன். இந்த ஓடுகளெல்லாம் கடற்பூச்சினுல் கொன்று தின்னப்பட்ட சிப்பி களின் ஓடுகள்தான்.... கடற் பூச்சு சிப்பிகளைக் கொன்று தின்று வாழும் ஒரு பிராணி' இவ்வாறு நண்பன் கூறினுன்.

அவன் என்னைக் கேலி செய் கிருன் என்றே எண்ணினேன்.

'என்னை ஏமாற்றப் பார்க்கி கிருயா?'

'ஏமாற்ற' என்றவாறே அவன் தனது கைத்தடியை நீரி னுட் செலுத்தினுன். பின்பு கற்பொந்திற்குள் கைத்தடியைச் செலுத்துவதற்காக தன்கையை முழங்கைவரை நீரினுட் செலுத் தினுன். ஏழு எட்டு முறை கைத் தடியாற் குத்தியபோது இராட் சதத் தலையொன்று பொந்தி னின்றும் வெளியே வந்தது. வெளியே வந்த அந்தக் கடற் பூச்சு ஒரு கணத்திலேயே மறைந்து விட்டது.

பட்டுப்போய் விழுந்த தென்னைமரத்தின் குற்றி யொன்று கற்பாறைமீது போ டப்பட்ட அடிப்பாலம்போல் இருக்கின்றது. அதன் நுனிப் பகுதி கடற்கரையிலிருந்தது. கற்பாறையினின்றும் இறங்கிய அவன் சிறிது தூரம் சென்று தென்னங்குற்றியில் அமர்ந்து கொண்டான். இரண்டு கால்க ளையும் மணற்பரப்பில் ஊன்றி வைத்திருந்த அவன், கடலுக் குப் பின்பக்கம் கட்டியிருக்கும் இடிந்த வீடொன்றைக் காட்டி னுன். தென்னைமரமும், கற்பா றையும், அந்தப் பாழடைந்த வீடும் ஒன்றுக் கொன்று ஒற்று மையுடையன என்பதைப் போலவே அவன் காட்டினுன்.

'எட்டு மாசங்களுக்கு முன்பே இந்தத் தென்னைமரம் பட்டுப்போய் விழுந்தது. தென்னைமரம் விழுந்ததுதான்

தாமதம் காகக் கூட்டத்தைப் போல் சிறுவர்கள் கூட்டமாக வந்து தென்னங் குரும்பைகளைப் பிடுங்கிக் கொண்டார்கள். தென்னையோலையை வெட்டித் தென்னை வட்டைப் பிரித்துக் குருத்தையெடுத்துப் பகிர்ந்து கொண்டார்கள்'

'தென்னை மரத்தை வெட்டிச் சிலாகைகளாகச் சீவாதிருப்பது ஏன்? மிச்ச மரத்தைச் சுண்ணும்புச் சூழைக்காரர்களுக்கு விறகாக விறகலாமே?'

'இந்தத் தென்னைமரத்திற்கு உரிமையாளர்கள் எட்டுப்பேர் இருக்கிறுர்கள். சொந்தக்காரர்கள் அதிகமாகையால் ஒருவராலும் மரத்தை வெட்டிச் சிலாகைகளாக் சீவவில்லை. மரம் மைக்குமட்டும் இப்படியே விட்டுவிட்டார்கள்.'

பாழடைந்த வீட்டை அவன் மீண்டும் எனக்குக் காட்டினுன்.

'இந்தத் தென்னைமரமும், கற்பாறையும், அந்த வீடாகிய மூன்றும் ஒன்ருகவே இடிந்து விழுந்தவை. அவை மூன்றும் ஒரே கதையையே சொல்லும். நீர்ப்பெருக்கு ஏற்படும்பொழுது கற்பாறை மட்டும் புதிதாக மாறும். இப்பொழுது காய்ந்து கருகாகியிருக்கும் பாசி மீண்டும் புத்துயிர் பெற்று வளர்ந்து கற்பாறைக்குப் புதிய தோற்றத்தைக் கொடுக்கும்... ஆனுல் தென்னங்குற்றியும் அந்தவீடும் இடிவதும் பாழடைவதும் அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது'

பலப்பிட்டிக்கும் காலிக்கும் இடையிலிருக்கும் பிரதான வீதியின் இருபக்கங்களிலும் இடைக்கிடை காணப்படுகின்ற இடிந்த வீடுகளைத்தான் ஒருமுறை எண்ணிப் பார்த்ததாக அவன் என்னிடம் கூறினுன்.

'இந்த இடிந்த வீடுகளுக்குக் கதைக்க முடியுமாயிருந்தால் ஒவ்வொன்றும் வெவ்வேறு துக்கம் நிறைந்த கதைகளையே கூறும்'

'இடிந்த வீடுகள் கதைக்க ஆரம்பித்தால் பெரிய நச்சரிப்பே ஆரம்பித்துவிடும்' என்றேன் நான்.

'மற்றைய இடிந்தவீடுகளைப் போலவே இதுவும் முற்ருகக் கட்டுப்படாத வீடு. மற்றைய இடிந்த வீடுகளும் இதைப் போன்றதே. சிவர் வைத்து ஒடும் போட்ட பின்பே இந்த வீடு இடிந்து விழுந்தது. சில வீடுகள் மூன்று நாலு சிவர் வைத்தபின்பே இடிந்து விழுந்து விடும். வீடுகளைக் கட்டி ஒடு வைத்து, சாந்து பூசி வேலை முடிந்தும் அதில் மனிதர்கள் குடியேருதது எதனுல்?'

'வீடுகளைக் கட்டிய மனிதர்கள் அவைகளைக் கைவிட்டது அவைகள் சும்மா வளரும் என்ற எண்ணத்தினுற்போலும்! கரைப் பிரதேசங்களில் வாழும் சோம்பேறிகள் தென்னங்கன்றுகளை நாட்டி மறைத்து வைத்துவிட்டு வீட்டுக்குப்போய் நித்திரை கொள்ளுவார்கள். எட்டு வருடங்களின்பின் தென்னங்கன்றுகள் பெரிதாக வளர்ந்த பின் அவர்கள் தேங்காய் பறிக்கப் போவார்கள். இந்த வீடுகளையும் ஆரம்பித்து, கூரைகள் கதவுகள் வளர்ந்தபின்பு அங்கு போய்க் குடியேற எண்ணியுள்ளார்கள் போலும்! அதுதான் அவர்கள் வீட்டைச் சிறிது கட்டிவிட்டு இடையில் நிற்பாட்டியிருக்கிருர்கள்!'

'நீ சரியான துஷ்டன்' என் நண்பன் கோபத்துடன் கூறினன்.

'நீ மனிதர்களின் நிலைகண்டு சிரிக்கிற கொடியவன்'

அவன் இடிந்த வீடுகளின் தையைக் கூறினன். சிலவீடுகள் 1899-ம் ஆண்டில் கட்ட ஆரம்பிக்கப்பட்டன. கரி தோண்டுவதனுலோ விற்பதனுலோ மனிதர்களுக்குக் கிடைத்த பணத்தினுலோ அந்த வீடுகளைக் கட்டினர். அடுத்தவனுக்குக் குறைந்தவனல்ல என்ற எண்ணத்தில் பெரிய வீடுகளில் வாழ எண்ணிய மனிதர்கள் தமது பணநிலைமையை அறியாமல் கட்ட ஆரம்பிக்கப்பட்ட வீடுகளிற் சிலவும் அவற்றிலடங்கும். ஏதோவொரு வியாபாரத்தில் பெற்ற சிறிய லாபத்தினுல் இளைஞனெருவன் இன்னுமொரு வீட்டையும் கட்டத் துவங்கி அவன் இடையில் நட்டமடைந்தான். இடிந்த அந்த வீடு, டுவிட்களிசானை அணிந்து சாக்குப் படங்கினுல் மேலுடம்பை மூடியிருக்கும் மனிதனெருவனைப் போன்றது என்று கூறிய அவன் கடலுக்குப் பின்பக்கத்தைக் காட்டியிருக்கும் அந்த இடிந்த வீட்டைக் காட்டினன்.

அது சுண்ணும்புக் கற்களினுல் கட்டப்பட்ட பெரிய வீடாகும். சாந்து பூசப்படாததினுல் அதன் சுவர்கள் கற்குவியல்களைப்போல் தெரிகின்றன. ஆனல் பலாப்பலகைக் கதவுகளுக்கும் சன்னல்களுக்கும்மேல் அழகான வேலைப்பாடுகளுடனமைந்த பலகைகள் இருந்தன. தென்னங்கிடுகுகளும் பூவரசமரத் தடிகளும் வீட்டின் ஒரு பக்கத்திற்கு நிழல் கொடுக்கும் கூரையாக அமைக்கப்பெற்றிருந்தது. கூரையிலுள்ள கிடுகுகள் மைத்துப்போயிருந்தன.

'வீட்டின் ஒரு பக்கம் மட்டும் மேயப்பட்டிருப்பது ஏன்? சுவர் நனையமுடியாது. மற்றப் பக்கம் மேயாததனுல் அந்தப் பக்கச் சுவர் நனையுமே' என்றேன் நான்.

'அந்த வீட்டில் ஆட்கள் இருக்கிருர்கள்' நான் புதுமையடைந்தேன்.

'அடைத்த பகுதியில் அம்மாவும் மகளும் சின்ன மகன் ஒருவனும் வாழுகின்றுர்கள். அடுத்த பகுதி நனைகிறது'

'வீதி அருகில் இருக்கிற மடத்தையும் இந்தப் பாழடைந்த வீடுகளையும் அரசாங்கம் உடைக்கவேண்டும்'

'ஏன்?'

'இந்த வீடுகளால் வீதியும் ஊரின் அழகும் கெடுகிறது, வீடுகள் மட்டுமல்ல, வீட்டு மனிதர்களின் உடலும் உள்ளமும் இடிந்து விழுகின்றது. அதைப் பார்க்கின்ற மனிதர்களின் உடலும் உள்ளமும் இடிந்து விழுகின்றது.........'

'நீ சரியான கொடியவன்' என்று சொல்லிக் கொண்டே என் நண்பன் தென்னங்குத்தியினின்று எழுந்தான்.

'வீட்டுக்குப் போவமா?'

'ஓம்...... தெரியவில்லையா இருட்டுப்பட்டுக்கொண்டு வருகிறது. கடலில் மறையப்போகும் சூரியன், சரிவாக இரவில் அணையப்போகும் தீமூடு போல......' என்று சொல்லிக்கொண்டே நண்பன் அடிவானத்தைப் பார்த்தான்

'நீ கொடியவன்' என்று சொல்லிக்கொண்டே அவன் நடந்து சென்ருன்.

'உனக்கு மற்றவர்களின் துன்பம், சுகம் இரண்டும் ஒரே மாதிரி; இரண்டுக்குமே சிரிக்கின்ருய். உனக்கு நெஞ்சிருக்கிறதே தவிர கருணையில்லை; பாழடைந்த வீடுகளை உடைத்துப் போட்டுவிட்டால் இந்த ஏழைகள் எல்லாம் தெருவில் இறங்கிப் பிச்சை எடுக்க வேண்டியதுதான்.........'

நான் சிரிப்பதைக் கண்ட அவன் மிகுந்த கோபமடைந்து என்னை ஏசியவாறே வீட்டை நோக்கிப் புறப்பட்டான்.

பாழடைந்த வீட்டின் பின் பக்கத்தில் தென்னங்கிடுகுப் படலையை திறந்துகொண்டு இளமங்கையொருத்தி வெளியே வந்தாள். அவளைக் கண்ட நான் சிப்பியோடுகளினுல் சுற்றியிருந்த அந்தக் கற்பொந்தினின்றும் வெளியே வந்த இராட்சதத் தலையைப் போன்ற கடற்பூச்சைக் கண்டதுபோல புதுமையடைந்தேன்.

மிக அழுக்கடைந்த உடுப்பை அணிந்திருந்தாலும் அவள் அழகான கன்னியாவாள்.

அவளது அழுக்கடையாத முகம் என் உள்ளத்தை மிகவும் கவர்ந்தது.

நான் அந்தப் பாழடைந்த வீட்டை நோக்கிவருவதைக் கண்ட அவள் மீண்டும் வீட்டினுள் நுழைய முயற்சித்தாள்.

'கொஞ்சம் நில்லுங்க'

அவள் சந்தேகத்துடனும் பயத்துடனும் என்னைப் பார்த்தாள்.

'வீட்டில் ஒருத்தரும் இல்லை'

'வீட்டில ஒருத்தரும் இல்லாவிட்டாலும் நீர் இருக்கிறீரே!' நான் சிரித்தவாறே கூறினேன்.

கிராமத்துப் பெண்ணொருத்தி 'வீட்டில ஒருத்தரும் இல்லை' என்று கூறுவது 'தன்னைத் தவிர வீட்டில் வேறு யாருமே இல்லை. ஆகையால் இங்கே வரவேண்டாம்' என்று அறிவிப்பதற்காகத்தான் என்பதை நான் அறிவேன். நிற்காமல் வீட்டை நோக்கி வரும் என்னை நிற்பாட்டுவதற்காக அவள் படலையைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். அவளது தாயோ தம்பியோ இல்லாத நேரத்தில் நான் வீட்டினுட் சென்றேனென்ருல் ஊர் முழுவதும் வம்புதும்பு பரவும். வீட்டினின்றும் வெளியே வந்த அவள் என்னைப் பார்த்ததும் உண்டான சிரிப்பை அடக்கிக் கொண்டதை நான் அவதானித்தேன். சிரிக்கப்போருளோ, கோவிக்கப்போருளோ என்றும் எண்ணிக்கொண்டேன்.

'இளந்தாரியொருவன் வீட்டுக்குவருவது விருப்பமில்லையா?'

'ஒருத்தரும்இல்லாத நேரத்தில் இளந்தாரி ஏன் வீட்டுக்கு வரவேணும்?' என்றவாறே அவள் சிரித்தாள்.

'இதுக்கு முதல் கண்டதும் இல்லை'

'ஜினசேன என் நண்பர்'

'அப்படி எண்டா அவர் தனிய வீட்டுக்குப் போருர்'

'நான் அவர் வீட்டில இருந்துதான் வாறேன். திரும்பவும் நான் பாணந்துறைக்குப் போக வேணும்'

'அப்படி என்டா ஊர் பாணந்துறையா?'

'ஓம்; இந்த வீடு யாருடையது?'

'எங்கட தான்.வேறயாற்ற? அவர் இந்த வீட்டைப்பற்றி ஏதும் சொன்னவரா?'

'இல்லே: அவர் இதைப் போன்ற இடிந்த வீடுகளுக்குச் சரியான ஆசை' அவள் சிரித்தாள்.

'இந்த வீட்டைக் கட்டியது எங்க அப்பாதான். ஆனு இப்ப இது அவருக்குச் சொந்தம்'

இளம் பெண்ணின் தந்தை எனது நண்பனின் வீட்டிலும் பார்க்க பெரிய வீடொன்றைக் கட்ட ஆரம்பித்தார். கரி வியாபாரத்தில் நட்டமடைந்ததால் அந்த வீட்டு வேலேகளெல்லாம் இடையில் நிறுத்தப்பட்டன. ஐந்து வருடங்களின் பின் அவர் இறந்துபோனுர். அவர் உயிருடன் இருந்தபொழுது எனது நண்பனிடம் கடனுக வாங்கிய எழுநூறு ரூபாவை அவரால் கட்டமுடியவில்லே. அதனுல் வீடு எனது நண்பனுக்குச் சொந்தமாகியது. இறந்தவரின் மனேவியையும் மகளேயும் மகனேயும் வீட்டிலிருந்து வெளியேற்ற எனது நண்பன் வழக்காடுகின்ருன். இதுவே நான் அந்தப் பெண்ணிடமிருந்து தெரிந்து கொண்ட கதை.

'கள்ளன்' நான் மனதுக்குள்ளேயே கூறிக்கொண்டேன்.

அந்தப் பெண் மீண்டும் இவ்வாறு கூறினுள்.

'அந்த மனிசன் மிகவும் பொல்லாதவர்' ★


# எம். இராசரத்தினம்

**செந்தமிழ்த் தோட்டம்**

பலாலி ரோட், திருநெல்வேலி.

எங்களிடம்

சகல ஒட்டு மாங்கன்றுகள், ஒட்டுத் தோடை, எலுமிச்சை, பலா, மாதுளே, நெல்லி, அரந்தி, பியர்ஸ், திராட்சைக்கன்று, யம்புநாவல், வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ரோசாச் செடிவகைகள்

★ மற்றும் ★

பூக்கன்றுகள், பூவிதைகள், கத்தரி, கறிமிளகாய், தக்காளி ஊர்மிளகாய், இலேக்கோவா, பீட்ரூட், முட்டைக்கோவா, சலாங்கன்றுகள் விதைகளும் சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**ஓடர்கள் கவனிக்கப்படும்**

சுக்தேவ் கருத்துக்கள்

தமிழாக்கம்: சு. மகாலிங்கம்

# சோசலிசம் பரப்பும்

# சாதனமாகத் திரைப்படம்

திரு. எஸ். சுக்தேவ் உலகப் புகழ்பெற்ற இந்திய செய்திப்பட இயக்குநர். அவர் அண்மையில் வங்காளதேசச் சோகச் சம்பவங்கள் குறித்து 'விடுதலைக்கு ஒன்பது மாதங்கள்' என்ற படத்தை உருவாக்கினர். சிறு திரைப்படத்துறையில் அப்படம் மிகஉன்னதமான படைப்பு எனப் பலராலும் விதந்து பாராட்டப்பட்டது.

சுக்தேவுக்கு தற்போது 39 வயதாகிறது. இவர் தமது கல்வியை பம்பாயில் பெற்ருர். திரைப்படத் துறையில் இவருக்கு முறையான பயிற்சியோ, பட்டமோ இல்லை. வேலையின்மை காரணமாக ஒரு தொழில் வேண்டியே இத்துறையில் இவர் பிரவேசித்தார். பல சிறு படங்களையும், வர்த்தக விளம்பரப் படங்களையும் முதலில் இவர் தயாரித்தார். இவரின் சில படங்கள் உலகப் பரிசில்களைப் பெற்றுள்ளன. இவருடைய பேட்டியொன்று 'இன்டியன் அன் ஃபாரின் ரிவியூ' என்ற இதழில் வெளியாகியுள்ளது. அப்பேட்டியில் முக்கிய பகுதிகளின் தமிழாக்கம் கிழே தரப்படுகிறது.

**கேள்வி:** நீங்கள் புரட்சியாளர், சர்ச்சைக்குரிய படத் தயாரிப்பாளர், இன்னற்படுவோரின் பக்கம் சார்ந்து நிற்பவர் என்றெல்லாம் பலவாறு குறிப்பிடப்பட்டு புகழப்பட்டுள்ளீர்கள். இவற்றை நீங்கள் ஏற்ருலும் சரி, ஏற்காவிட்டாலும் சரி அவை ஒரு கலைஞனை ஆக்கவும் அழிக்கவும் கூடியவை. உங்கள்மீது திணிக்கப்பட்டுள்ள இப் பட்டங்களைக் கருத்திற் கொண்டு எங்ஙனம் உங்கள் போக்கை நீங்கள் விபரிப்பீர்கள்?

**பதில்:** ஒருவரைக் குறிப்பிடுவதற்கு இத்தகையபட்டை சூட்டுவது பத்திரிகையாளர்களின் வேலை. அவை என்னைப் புண்படுத்தவுமில்லை, அவ்வகையில் அவற்றை நான் எடுத்துக் கொள்ளவுமில்லை. ஓரளவு மிகைப்படுத்தப் பட்டாலும், சிறிதளவு அவை ஒருவரின் போக்கைச் சுட்டுகிறதெனலாம். உண்மையில் எனது முதற் படமாகிய 'மைல்கள் பல செல்வதற்கு' என்பதில் நான் செல்வம் உள்ளவர்க்கும் இல்லாதவர்க்குமிடையே வளர்ந்துவரும் இடைவெளியைக் காட்டியுள்

ளேன். இதுபற்றி அதிகமான சினம் பலருக்கு ஏற்பட்டது.

படத்தயாரிப்பாளன் என்ற முறையில், நமது சமூகத் தீமைகளைப் போக்குவதற்கு எனக்கு திரைப்படம் தவிர்ந்த வேறு ஆயுதமில்லை. நான் தெரிந்தெடுத்த விடயங்கள் ஒரு சங்கிலித் தொடராக தீமைகளைத் திட்டவட்டமாகக் காட்ட முயன்றுள்ளன. எங்கும் அவசரம் இருக்கிறது. எனினும் காலம் விரைந்துகொண்டிருக்கிறது. நாம் அதிகம் செய்துவிட்டோம்; ஆயினும் இன்னும் மிக அதிகம் செய்யவேண்டியுள்ளது. நாம் காலத்தை வேகத்தால் வெல்லாவிடில் சாதாரண இந்தியனைச் சிறந்த மனிதனுக உருவாக்க முடியாவிடில், எம்முயற்சிகள் வீணுகிவிடும்.

இன்று நாம் அர்த்தமற்ற சோசலிசக் கோட்பாட்டுச் சர்ச்சைகளில் நம்மை இழந்துவிட்டோம். சாதாரண மனிதனுக்கு எதுவுமே புரியவில்லை. அவன் வெகுவாகக் குழப்பமடைந்துள்ளான். அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. எல்லோரும் அவசரப்படுகிறுர்கள். ஆனுல் எதற்கு? இந்தியாவைக் கட்டியெழுப்பவில்லை; தமது சொந்த வசதிகளைக் கட்டியெழுப்பவே அவசரப்படுகின்றனர், இது எனக்கு மிக்க சோகந்தரும் சம்பவமாகிறது. ஆதலினுல் புதிய இந்தியாவைக் கட்டியெழுப்பும் பணியில் என்னுல் இயன்றதை நான் செய்யவிரும்புகின்றேன். அதற்கு எனக்குள்ள ஆயுதம் திரைப்படங்களே.

**கேள்வி:** இந்திமொழியில் வியாபார நோக்குடன் படம் தயாரிக்க நீங்கள் இரு தடவை முயன்றுள்ளீர்கள். முதலாவதாக 'எனது காதல்' தோல்விப்படமாகியது. அடுத்ததான 'ரெஷ்மா ஓர் செரா' என்பதினை நீங்கள் இடைநடுவில் விட்டுவிட்டீர்கள். வியாபார நோக்குத் திரைப்படங்கள் பற்றிய தங்கள் அனுபவங்கள் என்ன? இரண்டாவது படத்தை இடையில் விட்டதேன்?

**பதில்:** 'எனது காதல்' ஒரு கேலிப்பட வகையைச் சேர்ந்தது. நான் பல விளம்பரப் படங்களை எடுத்தே வாழ்க்கை நடத்தி வருகின்றேன். ஆகவே விளம்பரப் படங்களைப் போன்று முழுநீளத் திரைப்படம் எடுத்தாலென்னவென்று எனக்குத் தோன்றியது. அதனை ஒரு மனப் பூர்வமான முயற்சியாகவே செய்தேன்.

அது எனக்கு ஒரு பயிற்சியே. ஆனுல் அதிக பணச்செலவுள்ள பயிற்சி. ஆனுல் உண்மையில் எனக்கு இத்தகைய படங்களில் வெற்றிபெறுவேனென்ற எண்ணமே இருக்கவில்லை. முதற் படத்திலேயே அது எனக்குத் தெரிந்துவிட்டது.

உண்மையில் 'எனது காதல் பட விடயத்தில் ஒருவரையும் குறைசொல்ல முடியாது. வியாபார நோக்குத் திரைப்பட விடயத்தில் இந்தியாவில் கையாளப்படும் ஒழுங்குகளுக்கு நீங்கள் கட்டுப்படாவிடில், நீங்கள் அதிகம் முன்னேற முடியாது. பணம் முதலீடு செய்பவரின் விருப்பத்திற்கேற்ப நீங்கள் நடக்கவேண்டும். அதிர்ஷ்டவசமாக படம் வெற்றிப்படமாக அமையின் அடுத்தமுறையும் உங்களுக்குப் பணமுதவ அவர் வருவார். அல்லாவிடில் அவரும் போய்விடுவார்; நீங்க

ளும் வெளியேற வேண்டியது தான்.

அடுத்ததாக 'ரெஷ்மா ஓர் செரா' படத்தை நாங்கள் எடுக்க ஆரம்பித்தபோது எல்லாம் நன்ருகவே இருந்தன. சில காட்சிகளின் பின் பிரச்சினைகள் தோன்றின. அப்படத்தின் தயாரிப்பாளரும் கதாநாயகனுமாகிய சுனில் தத் சிறந்தவர். ஆனுல் அவர் தம்மைச் சுற்றியுள்ளோரால் வழி நடத்தப்படுபவர். அந்தச் சுற்றியுள்ளளோருக்கு பச்சையான யதார்த்தத்தைக் காட்டும் படங்களைப் பார்த்த அனுபவமில்லை. அவர்கள் எமது படம் இன்பப் பொழுதுபோக்குப் படமல்ல என்று தீர்மானித்தனர். பொதுமக்களுக்கு இன்பப் பொழுதுபோக்கே வேண்டும். மக்களுக்காக அவர்கள் தீர்மானிக்கிறுர்கள். மக்களுக்கு என்னவேண்டுமென்று எனக்கும் தெரியாது. ஆனுல் தங்கள் உள்ளத்தைத் தொட்டு மீண்டும் வந்து பார்க்கும்படி தூண்டும் படங்களையே மக்கள் விரும்புவார்களென நான் நினைக்கின்றேன்.

இந்தக் கருத்து முரண்பாடு ஏற்பட்டது. எனவே ஒன்றில் படத்தை அவர் அமைக்கவேண்டும் அல்லது நான் நெறிப்படுத்த வேண்டும். எமது பழைய திட்டத்திலிருந்து வேறுபடுவதால் அவரே செய்யவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. ஆகவே நான் விலகிவிட்டேன். எனினும் நானும் சுனில்தத்தும் தொடர்ந்து நண்பர்களாகவே உள்ளோம்.

**கேள்வி:** நீங்கள் பலராலும் புகழப்படுகின்ற செய்திப்படங்களைத் தயாரித்துள்ளீர்கள். 'விடுதலைக்காக ஒன்பது மாதங்கள்' உட்படச் சில, சர்வதேசப் படவிழாக்களில் பாராட்டுதல்களும் பரிசில்களும் பெற்றிருக்கின்றன. அவற்றில் எந்தப் படத்திலிருந்து உங்களுக்கு கூடிய மனநிறைவு ஏற்பட்டது?

**பதில்:** ஒவ்வொரு படமும் அதனதன் அளவில் நிறைவையும் உற்சாகத்தையும் தந்தது. முதலில் நான் 'மைல்கள் பல செல்வதற்கு' என்ற படத்தை ஆக்கியதும் உலகின் முடிவுக்கே வந்துவிட்டேனென நினைத்தேன்; ஆனுல் பின்பு அது ஆரம்பம்தானெனக் கண்டு கொண்டேன். பின்பு நான் சிறைவாழ்க்கைபற்றி 'கிரகணத்தின் பின்' என்ற படத்தைத் தயாரித்தேன். அது பிறிதொருவகை அனுபவமாக இருந்தது. அதில் ஒரு கைதியின் தனிமைநிலை பற்றி ஆராய்ந்துள்ளேன். ஏன் அவன் கொலை செய்தானென்பதுபற்றிப் பார்க்காமல் அவன் தனிமைபற்றியும் எப்படி அவன் மீண்டும் சமூகத்தோடு ஒத்துப்போகப் பழகிக்கொண்டான் என்பதுபற்றியும் காட்டியுள்ளேன். இப்படி ஒவ்வொரு படத்தையும் தயாரித்து முடிக்கும்போது அதற்குரிய ஒருவகைத் திருப்தி ஏற்படுகிறது. விடயத்தையும் அதன் பிரச்சினைகளையும் பொறுத்தமட்டில் 'விடுதலைக்காக ஒன்பது மாதங்கள்' மிகச் சிரமமான ஒன்றெனலாம்.

வேறுவகையில் ஒருபடத்தை இன்னெரு படத்தோடு உண்மையில் ஒப்பிட முடியாது. இந்தக் கடைசிப் படத்தில் (விடுதலைக்காக ஒன்பது மாதங்கள்) அரசியல் பற்று மிகுந்த உலகத்தின்முன் ஒரு மனிதாபி

மானப் பிரச்சினையைக் காட்ட முயன்றுள்ளேன். மற்றவர்களுக்கு அது வெறும் அரசியல்; ஆனால் உலகின் இப் பகுதிக்கு குறிப்பாக இந்தியாவுக்கும் வங்காள தேசத்திற்கும் அது வெறும் அரசியல் அல்ல; அவர்களுக்கு அது ஒரு மிகப்பெரிய மனித சோகம். எனவே அரசியல் சிந்தனைக்குள் உணர்ச்சிகளைப் புகுத்தவேண்டியிருந்தது. அதே சமயத்தில் அவை எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துமென்பதையும் கவனித்துக் கொள்ள வேண்டியிருந்தது. இதுதான் சிந்தித்துப் படமாக்க உருவாக்குவதற்கு மிகச் சிரமமான அம்சம். நீங்கள் கோஷங்களைக் கொக்கரித்துக்கொண்டு முடிக்கலாம், ஆனால் அது நல்ல திரைப்படமாகாது. இந்தப் படத்தைத் தாயாரித்து முடித்து அதன் முதற் காட்சியை டில்லியில் பார்த்தபின்பு உணர்வுப் போராட்டங்கள் ஆறுதலடைந்தன. எனினும் மறுநாட் காலையிலேயே நான் கடுமையான சுகவீனம் காரணமாக மருந்துவமனையில் சேரவேண்டியதாயிற்று.

**கேள்வி:** நீங்கள் ஓரிடத்தில் நாடு சோசலிசத்தையடைய உதவும் படங்களை எடுக்க விரும்புவதாகக் கூறியுள்ளீர்கள் அதன் மூலம் நீங்கள் கருதுவதென்ன?

**பதில்:** உண்மையில் நான் புரிந்துகொண்டுள்ள எனது சோசலிசத் தேடலே அதுவாகும். வழக்கமான சம்பிரதாயப் படங்களையாக்கி அவற்றில் எனது பெயரைக் பொறித்து பணம் சம்பாதிப்பது இப்போது எனக்கு இலகுவானதாகத் தெரிகிறது. ஆனால் எனக்குள்ளே அது ஒரு மனவுறுத்தலை ஏற்படுத்துகிறது. எனக்குப் பணம் தேவை. ஆனால் அதனைப் பிழையான வழியில் பெற நான் விரும்பவில்லை. நான் படப்பிடிப்பிற்காகக் கிராமங்களுக்குச் சென்றபோதுஅங்குள்ள சேரிகளுக்கூடாக நடந்து செல்வேன். அப்போது அவ்வேழை மக்களின் துயரங்களை ஏன் போக்க முடியாதெனக் கேட்டுக்கொள்வேன். வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் பெரிய சமத்துவமின்மை காணப்படுகிறது. ஆகவே நான் தட்டிக்கழித்துத் தப்பமுடியாது. ஆதலினால் எனது சொந்த விமோசனத்திற்கும் ஆறுதலுக்குமாக சோசலிசக் குறிக்கோளையடைவதற்கு எனது சிறிய பங்கினைச் செலுத்தவேண்டியுள்ளது. இங்கு சோசலிசம் எத்தகைய உருவத்தை எடுக்கப்போகின்றதென எனக்குத் தெரியவில்லை. அதற்கான பாதையில் காரியங்கள் செம்மையான முறையில் நடப்பதாகத் தெரியவில்லை. ஆதலினால் எனது பங்கினை ஒன்றிரண்டு படம் மூலமல்ல, பலநூற்றுக் கணக்கான படங்கள் மூலம் செலுத்த விரும்புகின்றேன். அவைமூலம் மக்களுக்கு அவர்களின் உண்மையான அபிலாசைகள் பற்றிய உணர்வினை உண்டாக்க விரும்புகின்றேன். நம் வரலாற்றின் இன்றைய கட்டத்தில் நான் மக்களுக்கு கனவுகளையும் கற்பனைகளையும் வளர்க்க உதவக்கூடாது. அவர்களுக்கு அளிக்கும் அறிவினை, செய்திகளின் வகையினை நாம் சிறப்பாகக் கட்டுப்படுத்த வேண்டும். மக்கள் விரும்பியாதரிக்கும் திரைப்படச் சாதனம் மிக்க சக்திவாய்ந்ததென்பதால் நாம் தெளிவாக, திட்டவட்டமாகத் தேவையானவற்றையே வெளிப்படுத்த வேண்டும்.

கேள்வி: திரைப்படத்துக்கு நல்வேட்கைக் கோட்பாடிருத்தல் அவசியமாகக் கருதுகிறீர்களா? அப்படியாயின் எவ்வகையில்?

பதில்: நான் முன்பே குறிப்பிட்டதுபோல் திரைப்படம் சக்திமிக்கதென்பதால் கோட்பாடுடையதாக வேண்டும். எந்தக் கலைஞனும் நம் நாட்டினரின் ஏழ்மையைப் பார்த்து கவலைப்படாதிருக்க முடியாதென்ற வகையில் கோட்பாட்டு நெறிப்பாடு இருக்கவேண்டும். இங்கு ஏழ்மையென்றால் பலவகை ஏழ்மை. உடலின் ஏழ்மை, அறிவில் ஏழ்மை, எதிர்காலம்பற்றிய பார்வையின்மையைக் குறிக்கும்ஏழ்மை. நாட்டில் ஒரு புரட்சியை நாம் ஏற்படுத்தி வருவதல் திரைப்படத்திற்கு நல்வேட்கைக் கோட்பாடு அவசியமே. நாங்கள் எப்போதும் செய்து முடித்தது பற்றியே பறையறைந்து கொண்டிருக்கிறோம். ஆனால் நாம் செய்யாமல் விட்டவைபற்றி எதுவும் பேசுவதில்லை. இந்த இடத்தில்தான் நல்வேட்கைக் கோட்பாடுடைய கலைஞனுக்கு வேலையிருக்கிறது. அவன் உண்மைகளையும் விபரங்களையும் சேகரித்துக்கொண்டு ஏழ்மையை ஒழிப்பதின் அவசியம்பற்றிய உணர்வினை, விழிப்பினை மக்களுக்கு ஏற்படுத்தும் கைங்கரியத்தில் ஈடுபட வேண்டும்.

கேள்வி: சமூக யதார்த்தத்தைக் காட்டும் படங்களை நீங்கள் எடுத்துள்ளீர்கள். படத் தயாரிப்பாளர்கள் தம் படங்கள் மூலம் சமூக உணர்வினையும், யதார்த்தத்தையும் முன்னிறுத்தும் போக்கினைக் காட்டவேண்டிய தேவையிருக்கிறதென நீங்கள் கருதுகிறீர்களா?

பதில்: உண்மையில் 'தேவை' அல்ல, ஒரு அவசரநிலை இருக்கிறது. தற்போது இந்திரா காந்தி அற்புதம் நடந்திருக்கிறது. அதிலிருந்து சிறந்ததையெல்லாம் நாம் பெறவேண்டும். சிறிது இலேசாகவே நாம் சுதந்திரம் பெற்றுவிட்டோம். அதனால் நாம் போதியளவு அதனை மதிப்பதில்லை, இந்த இடத்தில் சமூக உணர்வுள்ள கலைஞர்கள் முன்வந்து தனக்கும் பிறகுக்கும் அறிவூட்ட வேண்டும்.


தரமான

கைத்தறிச் சேலைகள், வேட்டிகள்

படுக்கை விரிப்புகள்

தயாரிப்பவர்கள்

**லியோ ரெக்ஸ்**

45, ஜும்மா மொஸ்க் லேன், யாழ்ப்பாணம்.

# மானுடம் வெல்லும் நிச்சயம்

டொமினிக் ஜீவா

தமிழகத்திலிருந்தும் மலே சியாவில் இருந்தும் இலக்கிய நண்பர்களின் கடிதங்கள் வரு கின்றன, பல காலமாக.

இவை தனிப்பட்ட முறை யிலான கடிதங்களோ சேம லாபம் விசாரிக்கும் லிகிதங் களோ அல்ல. மாருக சூடான இலக்கியப் பிரச்சினை குறித்து எழுதப்படும் சுற்று நிருபங்க ளேயாகும்.

என்னைப் பொறுத்தவரை தனித் தனியாக இவர்கள் அத் தனை பேர்களுக்கும் பதில் எழு தத்தான் நிறைய ஆவல். இதைச் செய்ய முற்பட்டால் நான் இப்பொழுது செய்யும் வேலைகளுக்குக் குந்தகம் ஏற்ப டலாம் என்பது திண்ணம். அதற் காக இந்த இலக்கிய நெஞ்சங் களின் ஆவலை என்னுல் தட்டிக் கழிக்கவும் முடியவில்லை.

ஒவ்வொரு கடிதங்களுக்குப் பின்னுலும் ஒவ்வோர் இதயங் கள் என்னுடன் பேசுகின்றன. மனசில் சோர்வு தட்டி அல் லது அலுப்புத்தட்டிய சமயங் களில் இந்தக் கடிதங்கள் தான் எனக்கு 'டொனிக்!'

மானுடம் பாடிடும் வானம் பாடிகளான அக்கினி புத்திரன், ரவீந்திரன், மேத்தா போன் ருேர்களின் உள்ளத்துணர்வுக ளின் இதய வெளிப்பாட்டை நான் பூரணமாக உணருகின் றேன். கோவை நெஞ்சங்களுக்கு தலை வணங்குகின்றேன்.

இராஜபாளையம் இலக்கியக் குழுவினர் என்மேலும் சிறப்பாக மல்லிகை மீதும் வைத்துள்ள அசையாத நம்பிக்கை என்னை மெய்சிலிர்க்க வைக்கின்றது. தஞ்சைப் பெருநிலத்து இலக்கி யப் பூங்குயில்களான விச்வ நாதன், கைலாசம் போன்ருேர் களின் கடிதங்களில் தொனிக் கும் இறுக்கமான ஜீவ பந்தம் என் உழைப்புக்கு புத்துணர்வு ஊட்டுகின்றது.

சென்னையின் சிவப்பு மலர் கள் தி. க. சி., அறந்தை, எம். கே. ஆர்., கார்க்கி போன் ருேரின் கரிசனை மிக்க அன்பு மடல்கள் என்னைப் புதும் பலம் பெற்ற மனிதனுக உருவாக்க முனைகின்றன.

புதுமைப் பித்தன் மனைவி யாரது கடிதங்கள் அடிக்கடி வந்து ஈழத்து இலக்கியப் பிரச் சினைகளை விரும்பிக் கேட்கும் போது, மனசில் பெரு நம்பிக் கையும் உற்சாகமும் ஏற்படு கின்றது.

இன்னும் சிரம்பான், ஈப்போ, தைப்பிங் போன்ற இடங்களிலிருந்து வரும் கடிதங் களும் என்னை வந்து மொய்க் கின்றன.

இவை அனைத்துக்கும் என் னுல் ஒழுங்காகக் கடிதம்போட

முடியாத அவல நிலையை எண்ணிப் பார்க்கும்போது மனசில் பெரிய சங்கடம் ஏற்படத்தான் செய்கின்றது.

அதற்காகவே இந்தப் பகிரங்கக் கடிதத்தை எழுதுகின்றேன்.

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கான விடையாகவே மல்லிகை இதழ்களின் கட்டுரைகள் அமைகின்றன. இன்னும் விரிவாகச் செய்ய முயன்று வருகின்றேன்.

தமிழகத்தில் வளர்ந்து வரும் புதிய இலக்கியத் தலைமுறை நம்மைப் பார்த்துப் பிரமிப்படைகின்றது.

உண்மையாகவே இலக்கிய சம்பந்தமான வளர்ச்சியில் கடந்த 10 ஆண்டுகளுக்குள் நாம் அசுர சாதனைகள் செய்துள்ளோம். உண்மை.

நமது பாதை கேரளத்தையும் வங்கத்தையும் நோக்கிப் போகும் பாதை என்பதை முன்னரே உணர்ந்து திட்டமிட்டு உழைத்து வருகின்றோம்.

இலக்கியத்தைப் பணம் பண்ணும் சூழ்நிலை இங்கே கிடையாது. பல சிரமங்களுக்கு மத்தியில் பணத்தை இழந்தே இங்கு இலக்கியம் படைக்க வேண்டியுள்ளது. இது ஒரு காரணமாக இருக்கலாம் இங்கு.

இலக்கியம் வாழ்க்கையின் முதல் மூச்சாகச் செயல்படும் நிறுவனங்கள், தனி நபர்கள் காரியமாற்றும் ஒரு பசளைமிக்க பூமி ஈழம்.

சமீப காலத்தில் ஆழமான பிரச்சினைகள் பல நம்மை அலைக்கழித்ததால் புதிய அறிவு பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இவை எல்லாவற்றையும் விட தத்துவார்த்த ரீதியில் நாம் நமது இலக்கியப் போராட்டங்களைக் கூர்மைப் படுத்தி வந்துள்ளோம். அதனடிப்படையிலேயே விவாதங்களை நடத்துகின்றோம். இலக்கியங்களை விமர்சிக்கின்றோம். எழுத்துக்களை இனங்கண்டுகொள்ளுகின்றோம்.

இதற்கு முன்னால் தாக்குப் பிடிக்க வக்கற்ற — முதுகெலும் பற்ற — ஜாம்பவான்கள் தூர நின்று குய்யோ முறையோ எனக் கூச்சலிடுகின்றனர். கோஷமெழுப்புகின்றோம் எனச் சொல்லி அவர்களே கோஷமிடுகின்றனர் .சதிசெய்தனர்.

தமிழகச் சஞ்சிகைகள் இறக்குமதி வரையறுக்கப்பட்டது சம்பந்தமாகத் தப்பான கருத்து உங்களுக்குச் சொல்லப் பட்டிருக்கலாம். நீங்கள் தமிழகத்தில் நடத்தும் போராட்டத்தைத்தான் நாங்கள் இங்கே செய்கின்றோம்.

சஞ்சிகை ஏகபோக சக்திகள் தமது இலக்கியத்தை வைத்து வியாபாரம் செய்வதுடன் எமது நாட்டை நிரந்தரச் சந்தையாக வைத்திருக்க முனைந்தன.

இவைகளினது கருத்துக்கள் தமிழகக் கலைஞர்களினது கருத்துக்களல்ல எனச் சொல்லி நாம் இங்கு இயக்கம் நடத்தினோம். இது நமது கடமை.

மானுடம் பாடி, மனுக் குலத்தை நேசிக்கும் மகத்தானவர்களே, நமது கொள்கையும் இதுதான்; கோட்பாடும் அதுவேதான்.

உங்களது கருத்துக்கள் உலகளாவிய கருத்துக்கள். நாங்களும் நீங்களும் ஒன்றே. தொடர்ந்து எழுதுங்கள். பரஸ்பரம் கருத்துப் பரிமாறல்கள் செய்து கொள்வோம். ★

# G. S. L. பால்சாலை

270, மசஞ்சர் வீதி
92, ஆமர் வீதி | ஜங்சன்,
கொழும்பு - 12

இளம்பால்
சுத்தமான பசும்பால்
பெஷன் புருட்
நெல்லி ரசம்
☆ ☆ ஐஸ்கிறீம்

மற்றும்

சகல விதமான
குளிர் பானங்களுக்கும்
சிறந்த இடம்



கால் நடைகள் நாட்டின் செல்வம் அவற்றால்
உங்கள் செல்வத்தை பெருக்குங்கள்

☆ ☆ ☆ ☆

# S.D.W. GUNAWARDANA

262/2, Dutugemunu Mawatte,
**PELIYAGODA.**

卐 உயர்ந்த ஜாதி பசு மாடுகள், பால் ஆடுகள் விற்பனைக்குண்டு.

卐 வெண்ணெய், நெய் என்பன விற்பனைக்குண்டு

卐 இலங்கை எங்கும் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்

MALLIKAI OCTOBER 1972
Registered as a Newspaper in Ceylon


# Leela Saloon

*24, Sri Kathiresan Street,*
**COLOMBO 13**

"மல்லிகை" ★ ★ ★ ★

மூலம் எமது வாடிக்கையாளர்களுக்கு
வரவிருக்கும் தீபாவளிக்கான
வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கொழும்பில் ★ ★ ★ ★

திறமைமிக்க தொழில் நுட்பக் கலைஞர்
களைக் கொண்டு இயங்கும்
தரமான ஸ்தாபனம்.

யாழ்ப்பாணம் ★ ★ ★ ★

திறம் நல்லெண்ணெய், மற்றும்
சலூன்களுக்குத் தேவையான
உபகரணங்கள் யாவும் இங்கே கிடைக்கும்

## லீலா சலூன்

24, ஸ்ரீ கதிரேசன் வீதி,
கொழும்பு 13.


60, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் வசிப்பவரும், ஆசிரியரும் வெளியிடுபவருமான டொமினிக் ஜீவா அவர்களுக்காக மல்லிகை சாதனங்களுடன் யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா அச்சகத்தில் அச்சியற்றப்பெற்றது.